வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu





Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 04.04.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 96 | பக்கங்கள் : 12

# இன்று மாலை கொழும்புக்கு வருகிறார் இந்தியப் பிரதமர்!

## அவருடன் உயர்மட்டக் குழுவும் வருகிறது

கொழும்பு, ஏப்ரல் 04

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்பின் பேரில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று மாலை இலங்கைக்கு வருகிறார்.**



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான "நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்திற்கான உறுதிப்பாடு" என்ற எண்ணக்கருவை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில்,இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் இந்த விஜயத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் உள்ளிட்ட உயர்மட்ட இந்தியக் குழுவும் இணைய உள்ளது.

அத்துடன் இந்தியப் பிரதமருக்கான உத்தி யோகபூர்வ 11

# சமஷ்டி முறை அதிகாரப் பகிர்வை ஏற்படுத்த ஒத்துழைப்பை வழங்குக!

## இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 04

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை ஏற்படுத்த பெறுமதிமிக்க ஒத்துழைப்பை வழங்குங்குமாறு வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வர இருக்கிற நிலைமையில் தமிழ் மக்களுக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்க முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென பிரதமருக்கான மகஜரொன்றை யாழ். இந்திய தூதரகத்தில் நேற்று கையளித்ததுடன் யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பு ஒன்றையும் நடத்தினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் எட்டு மாவட்டங்களிலும் இயங்கும் சிவில் அமைப்புகளின் வலைப்பின்னலான வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஆகிய நாம், இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம், இலங்கையின் நீண்டகால தேசியப் பிரச்னையை 11

# அமெ. வரி குறித்து பேச்சு நடத்தப்படும்!

கொழும்பு, ஏப். 04

அமெரிக்கா எம்முடைய நாட்டின் மீது விதித்துள்ள 44 வீத வரி விடயத்தில் பேச்சுவார்த்தைகள் மூலம் சாத்தியமான கட்டணக் குறைப்பைப் பெற எதிர்பார்த்துள்ளதாக தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள விசேட காணொளிப் பதிவிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் 11

# ஈழத் தமிழருக்கான இன, மத அடையாளத்தை உறுதி செய்க!

## சிறீதரன் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 04

ஈழத்தமிழர்களின் இன, மத அடையாளங்களை உறுதி செய்யுமாறு பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடவுச்சீட்டுக்கான புகைப்படங்களை எடுக்கும் போது பெண்கள் நெற்றியில் பொட்டிடக் கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ள கருத்தை மேற்கோள் 11

# இந்திய ஒப்பந்தங்கள் குறித்து அமைச்சரவைக்கு தெரியாது!

கொழும்பு, ஏப். 04

இந்தியாவுடன் இலங்கை அரசாங்கம் செய்து கொள்ளவுள்ள ஒப்பந்தங்களை இரகசியமாகப் பேணுவதன் நோக்கம் என்னவென முன்னிலை சோசலிசக் கட்சியின் செயலாளர் புபுது ஜயகொட கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த ஒப்பந்தங்கள் குறித்து விளக்கமளிக்குமாறு கோரி முன்னிலை சோசலிசக் கட்சியினால் 11

# கச்சதீவு பிரச்னையை வைத்து தமிழகத்தில் வாக்கு அரசியல்!

## அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்

யாழ்ப்பாணம், ஏப். 04

கச்சதீவு பிரச்னையை வைத்து தமிழகத்தில் வாக்குவேட்டை அரசியல் நடத்தப்பட்டு வருகின்றது. எது எப்படி இருந்தாலும் கச்சதீவென்பது இலங்கைக்குரியதாகும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் மற்றும் கச்சதீவு பிரச்னை என்பன தொடர்பில் யாழில் நேற்று ஊடகங்களிடம் கருத்து 11



# இராஜதந்திர ஒப்பந்தங்களை மீறாமல் இந்தியாவுடன் உடன்பாட்டுக்கு ஆதரவு

## ஐக்கிய தேசிய கட்சி யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 04

இந்தியாவுடன் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திர ஒப்பந்தங்களை மீறாத வகையில் புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுமானால், அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் முக்கியஸ்தர்களுக்கும், அக்கட்சியின் சார்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடும் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு யாழிலுள்ள தனியார் விருந்தினர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. 11

# நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் உத்தரவு இன்று அறிவிக்கப்படும்

கொழும்பு, ஏப். 04

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான உத்தரவு இன்று வெள்ளிக்கிழமை அறிவிக்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

வேட்புமனுக்கள் நிராகரிப்பு தொடர்பாக நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் உள்ள 11

# புலமைப்பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 10இல்!

கொழும்பு, ஏப். 04

தரம் 5 மாணவர்களுக்காக நடத்தப்படும் 2025 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான அறிவிப்பை பரீட்சைகள் 11

# சட்டக் கல்லூரி பரீட்சையில் மோசடியா? நாமலுக்கு எதிராக விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஏப். 04

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சட்டக் கல்லூரி பரீட்சைக்கு மோசடியாக தோற்றியதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணையைத் தொடங்கியுள்ளதாக குற்றப் புலனாய்வுத் துறை நேற்று வியாழக்கிழமை கொழும்பு நீதவான் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான குடிமக்கள் அதிகாரத்தால் அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

இலங்கை சட்டக் கல்லூரி தேர்வுகளின் போது 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் தேர்தல் விதி மீறல் இதுவரை நான்கு முறைப்பாடுகள்

வவுனியா, ஏப். 04

தேர்தல் செலவுகளை வெளிப்படுத்தும் சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் வேட்பாளர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளதுடன், தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பில் இதுவரை 4 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக வவுனியா மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் சி.அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் பிரசார அலுவலகங்கள் அமைத்தல் மற்றும் சட்டதிட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

விசேடமாக, 154 வாக்களிப்பு நிலையங்களில் வாக்கெடுப்பு நடைபெறுகின்ற போதும், இம்முறை உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்திற்கு அமைய வட்டாரங்களில் வாக்குகள் எண்ணப்பட்டு வெளியிடப்பட இருக்கின்றன. அதற்கு அமைவாக 5 உள்ளூராட்சிச் சபைகளிலும் உள்ள 56 வட்டாரங்களிலும் வாக்குகள் எண்ணப்படும். ஒரு வட்டாரத்தில் பல வாக்களிப்பு நிலையங்கள் இருந்தாலும் ஒரு நிலையத்துக்கு பெட்டிகள் கொண்டுவரப்பட்டு தனித்தனியாக எண்ணப்பட்டு பெறுபேறுகள் வெளியாகும்.

தேர்தல் செலவுகளை வெளிப்படுத்தும் சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக அனைத்து வேட்பாளர்களுக்கும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. தேர்தல் முடிந்த பின் தேர்தல் செலவுகளை சமர்ப்பிக்கவேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காவிடின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். அது பெரியளவில் பாதிப்பு ஏற்படுத்தக்கூடாது என்பதற்காக தேர்தல் செலவீனங்கள் மற்றும் அதனை எவ்வாறு சமர்ப்பிப்பது தொடர்பில் வேட்பாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நீதியானதும், நியாயமனது மான ஒரு தேர்தலை எதிர்பார்க்கின்றோம். ஒரு வாக்களர் யாருக்கு வாக்களிக்கின்றார் என்பதை தவிர, அனைத்து விடயங்களும் மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கப்படுகின்றது. முறைப்பாட்டுப் பிரிவு தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதற்கான தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை 4 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. நான்கும் சிறிய முறைப்பாடுகள். தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பானவை. தேர்தல் வன்முறை தொடர்பில் எவையும் பதிவாகவில்லை. அதில் 3 முறைப்பாடுகள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுறுத்தப்பட்டுளளது. ஒரு முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

தபால் மூல வாக்கெடுப்பு காலப்பகுதியில் பிரசார நடவடிக்கைகளை மட்டுப்படுத்துமாறு கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களிடம் கோரியுள்ளோம். தபால் மூல வாக்களிப்புக்கான ஏற்பாடுகளில் அதனை பொதி செய்து அனைத்து நிலையங்களுக்கும் அனுப்புவதற்கான நடவடிக்கை எதிர்வரும் 7 ஆம் திகதி இடம்பெறும். அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

தபால் மூல வாக்கெடுப்பு எதிர்வரும் 22, 23, 24 ஆம் திகதிகளில் இடம்பெறும். 22 ஆம் திகதி தேர்தல்கள் அலுவலகம், மாவட்ட செயலகம் மற்றும் பொலிஸ் நிலையங்களில் இடம்பெறும். ஏனைய அரச திணைக்களங்கள் மற்றும் முப்படையினரின் தபால் மூல வாக்களிப்பு இம்மாதம் 23, 24 ஆம் திகதிகளில் இடம்பெறும். அதில் தவறுபவர்கள் இம்மாதம் 28, 29 ஆம் திகதிகளில் மாவட்ட செயலகத்தில் வாக்கினைச் செலுத்த முடியும். இந்த காலப்பகுதியில் வாக்களிப்பு இடம்பெறும் திணைக்களங்களுக்கு அண்மித்த பகுதியில் பிரச்சார நடவடிக்கைகளை மட்டுப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளோம் - என்றார். (அ)

# யாழ்ப்பாணம் கச்சேரி பகுதியில் கார் - கப் வாகனம் மோதி விபத்து!



யாழ்ப்பாணம், ஏப். 04

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற விபத்தில் இரண்டு வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

நேற்று மதியம், கச்சேரிக்கு அண்மித்த பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் மீது, சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த கப் ரக வாகனம் ஒன்று மோதி விபத்து சம்பவித்துள்ளது. எனினும் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

சாரதியின் தூக்கக் கலக்கம் காரணமாக விபத்து சம்பவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. விபத்து குறித்தான விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

# பேருந்து - ஓட்டோ விபத்து; பெண் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 04

தனியார் பேருந்து ஓட்டோவை மோதிய விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார். இதில், மூவர் காயமடைந்தனர்.

கண்டி - யாழ்ப்பாணம் ஏ 9 பிரதான வீதியின் கெக்கிராவ தும்ரிய நகர் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.


இதில் கெக்கிராவையை சேர்ந்த 39 வயது பெண்ணே உயிரிழந்தார். காயமடைந்தவர்களில் பாடசாலை மாணவிகள் இருவரும் முச்சக்கர வண்டியின் சாரதியும் உள்ளடங்குவர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

விபத்துடன் தொடர்புடைய பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# தமிழக ஆளுநரின் இலக்கிய ஆளுமைகளுக்கான விருதுக்கு இலங்கையில் இருந்து இருவர் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப். 04

தமிழக ஆளுநரினால் வழங்கப்படவுள்ள தமிழ் இலக்கிய அறிஞர்களுக்கான விருது வழங்கலில் இலங்கையைச் சேர்ந்த மூத்த சொற்பொழிவாளர்கள் இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.





வவுனியா தமிழ் சங்க அமைப்பாளர் தமிழருவி த.சிவகுமாரனும் யாழ்ப்பாண தமிழ்ச் சங்க பொதுச் செயலாளரும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல் வருமாகிய செந்தமிழ்ச் சொல்லருவி சந்திர மௌலீசன் லலீசனுமே இவ்விருதுக்காக இலங்கையில் இருந்து தெரிவாகி உள்ளனர்.

தமிழ் இலக்கிய விருது வழங்கும் விழா 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு சென்னை ஆளுநர் மாளிகை ராஜ் பவனில் தமிழக ஆளுநர் ஆர். என். ரவி தலைமையில் நடைபெறவுள்ளது. (அ)

# 15 கிலோ கஞ்சா வவுனியாவில் மீட்பு

வவுனியா, ஏப். 04

வவுனியாவில் 15 கிலோ கஞ்சா விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளதுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா கணேசபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின்போது மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 15 கிலோ கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து, அதனை உடைமையில் வைத்திருந்த கணேசபுரம், கூமாங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 25 - 32 வயதிற்குட்பட்ட மூவர் கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் கைது செய்யப்பட்ட நபர்கள் நெளுக்குளம் பொலிஸாரிடம் விசேட அதிடிப் படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (அ-10)

# கொடுக்குளாய் - இயக்கச்சி அபாய வெளியேற்றப் பாதை புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப் 04

வடமராட்சி கிழக்கு கொடுக்குளாய் - இயக்கச்சி அபாய வெளியேற்ற பாதையை புனரமைக்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் குமாரசாமி பிரபாகரமூர்த்தி மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், கொடுக்குளாய் கிராம அபிவிருத்தி சங்கத்தினர், உடுத்துறை கிராம அபிவிருத்தி சங்கத்தினர், பொது மக்கள் என பலர் இணைந்து, நேற்று முன்தினம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது, கொடுக்குளாய் - இயக்கச்சி அபாய வெளியேற்ற பாதையை புனரமைக்க, தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதுடன், கலந்துரையாடலை தொடர்ந்து, வீதிப் புனரமைப்புக்கான அளவுத் திட்டங்களும் எடுக்கப்பட்டன.

கொடுக்குளாய் மல்வில் தீர்த்தக் கரையில் இருந்து, இயக்கச்சி வரையான வீதி புனரமைப்புக்கான வேலைத் திட்டம், விரைவாக நிறைவு செய்யப்படும் எனவும், கலந்துரையாடலில் முடிவு எடுக்கப்பட்டது. (அ)

# 09ஆம் திகதி வரை மழை!

யாழ்ப்பாணம், ஏப். 04

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் 09 ஆம் திகதி வரை இடிமின்னலுடன் கூடிய மிதமான மழை கிடைக்க வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை தலைவர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்

இது தொடர்பில் அவர் வெளிட்டுள்ள அறிவிப்பில்-

முன்னரே குறிப்பிட்டபடி நேற்று முன் தினம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமான மழை கிடைக்க தொடங்கியுள்ளது. இந்த மழை எதிர்வரும் 09ஆம் திகதி வரை நீடிக்கும். தற்போது கிடைக்கும் மழை இடிமின்னல் நிகழ்வுகளோடு இணைந்ததாகவே இருக்கும்.

இந்த இடி - மின்னல் இரண்டு வகைப்படாதாகும். இரண்டு முகில்களுக்கிடையிலான கிடையான மின்னேற்றம் மற்றும் பூமியின் மேற்பரப்பிற்கும் முகில்களுக்கும் இடையிலான குத்தான மின்னேற்றம். இதில் குத்தான மின்னேற்றமே எமது உயிர், உடல் மற்றும் சொத்துப் பாதிப்புகளை ஏற் படுத்துகின்றது.

இதில் உயிர் மற்றும் உடற் பாதிப்புகளை எவ்வாறு தவிர்க்கலாம் என்பது தொடர்பான சில ஆலோசனைகள் தரப்படுகின்றன:

1. மார்ச், ஏப்ரல், மே, ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் செறிவான மழைவீழ்ச்சி (20 மி.மீ.) தொடங்கும் போதே அடுத்து இடி - மின்னல் நிகழ்வு இடம்பெறும் என்பதனை அனுமானித்து பாதுகாப்பிடத்திற்கு நகர்தல்.

2. பரந்த மற்றும் வெட்ட வெளிகளில் நிற்பதனைத் தவிர்த்தல்.

3. திறந்த வெளிகளில் திறந்த வாகனப் (சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்) போக்குவரத்தைத் தவிர்த்தல்.

4. தொலைபேசி மற்றும் மின்சாதனப் பயன்பாட்டைத் தவிர்த்தல்.

4. மரங்களுக்கு அண்மையில் அல்லது கீழே நிற்பதனைத் தவிர்த்தல். மழையிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக எக் காரணம் கொண்டும் மரங்களின் கீழ் ஒதுங்காதிருத்தல்.

5.விவசாயிகள் விவசாய உபகரணங்களைப் பாவிக்காதிருத்தல்.

6. ஒரு பிரதேசத்தில் தொடர்ச்சியாக இடி - மின்னல் நிகழ்வுகள் இடம்பெறுமாயின் தாடையைத் தொடர்ந்து அசைத்துக் கொண்டிருத்தல். இது செவிப்பறைப் பாதிப்பைத் தடுக்கும்.

7. இயன்றவரை கால் பாதத்தின் குதிப்பகுதி நிலத்தின் மீது படுவதனைத் தவிர்த்து காதுகளை மூடி நிலத்தில் இருத்தல்.

8. வீட்டில் நின்றாலும் சமையலறைப் பகுதியில் நிற்பதனைத் தவிர்த்தல். மேற்கூறிய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் இடி- மின்னல் பாதிப்புகளைக் குறைக்க முடியும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
04.04.2025 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ் நாட்டின் கச்சதீவுக் கோரிக்கை

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இன்று இலங்கை வரவுள்ளார். இருநாள் விஜயமாக இலங்கை வரும் மோடி, பாதுகாப்பு விடயங்கள் உள்ளடங்கலாக, சில முக்கிய விடயங்கள் தொடர்பில் உடன்பாடுகளை எட்டுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார். இந்த நிலையில் தருணம் பார்த்து, கச்சதீவை இலங்கையிலிருந்து மீட்டு எடுக்குமாறு கோரி, தமிழ் நாட்டு சட்டமன்றத்தில் ஏகமனதான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இதற்கு தமிழ் நாட்டின் எதிரணியினரான பாரதிய ஜனதா கட்சி மற்றும் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகமும் முழுமையான ஆதரவை வழங்கியிருக்கின்றன.

இலங்கையில் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ள மோடிக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கிலேயே இவ்வாறானதொரு தீர்மானத்தை தமிழ் நாடு நிறைவேற்றியிருக்கின்றது. ஆனால், இங்கு கவனிக்கப்பட வேண்டிய பிறிதொரு விடயம் உண்டு - அதாவது, எதிர்காலத்தில் இந்திய - இலங்கை மீனவர் பிரச்னை ஈழத் தமிழ் மக்களின் பிரச்னையை விடவும் முக்கியமான விடயமாக மாறும். இப்போதே அவ்வாறான நிலைமை காணப்படுகின்றது ஏனெனில் தமிழ் நாட்டிலிருந்து மீனவர் பிரச்னை தொடர்பில் மட்டும் தான் தற்போது இந்திய மத்திய அரசை நோக்கிக் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

இலங்கை தொடர்பான இந்தியாவின் கரிசனையில் ஈழத் தமிழர் விவகாரம் பிரதான விடயமாக இருந்த காலம் ஒன்றுண்டு. தமிழ் நாட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட அழுத்தங்களே அதற்கான பிரதான காரணமாகும். இலங்கை இனப் பிரச்னை விவகாரத்தில் இந்தியா நேரடியாக தலையீடு செய்த காலத்திலும் தமிழ் நாட்டை ஒரு பிரதான காரணமாகக் காண்பித்தே புதுடில்லி அதன் கொள்கையை திட்டமிடப்பட்டது. இலங்கையில் தமிழ் மக்கள் பாதிக்கப்படும் போது ஆறு கோடித் தமிழ் மக்களைக் கொண்டிருக்கும் இந்தியா அமைதியாக பார்த்துக் கொண்டிருக்க முடியாது - என்று கூறியே, அன்றைய இந்தியத் தலையீட்டுக்கான நியாயம் முன்வைக்கப்பட்டது.

ஈழத் தமிழ் மக்கள் தொடர்பான விடயங்களில் தமிழ்நாடே இந்தியாவின் காரணமாகவும், தந்திரோபாயமாகவும், திறவுகோலாகவும் இருந்தது. ஆனால், தற்போது அவ்வாறான நிலைமை இல்லை. உண்மையில் ஈழத் தமிழர் விவகாரம் தமிழ் நாட்டில் இப்போது ஒரு பிரதான அரசியல் விவகாரமாகவும் இல்லை, அவ்வாறானதொரு அரசியல் சூழலை ஏற்படுத்தக் கூடிய வல்லமையுடன் ஈழத் தமிழ் அரசியல் சமூகமும் இல்லை.

மோடி இலங்கை வருகின்ற போது, தமிழ் நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் எவையுமே ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை உறுதிப்படுத்தும் விடயத்தில் பிரதமர் தலையீடு செய்யவேண்டும் என்று கோரவில்லை - மாறாக தமிழ் நாட்டு மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர் - இதற்கு கச்சதீவை இலங்கைக்கு வழங்கியதே பிரதான காரணம் - எனவே அதனை மீளவும் இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்னும் கோரிக்கையே பிரதான அரசியல் கோஷமாக மாறியிருக்கின்றது. ஈழத் தமிழர் அரசியலுக்கு தலைமை தாங்குவதாகக் கூறிக்கொள்ளும் நபர்கள் ஆளுமையுடன் அரசியலை முன்னெடுக்காவிட்டால் இலங்கை - இந்திய மீனவர் பிரச்னை மட்டுமே இந்தியாவின் பிரதான கரிசனைக்குரிய விடயமாக இருக்கும்.

# 30 இலட்சம் வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டன

கொழும்பு, ஏப். 04

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு தேர்தல் திணைக்களம் ஒரு கோடியே 80 இலட்சம் வாக்காளர் அட்டைகளை கோரிய நிலையில் 30 இலட்சம் வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளன.

109 உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளுக்கான தபால் மூல வாக்களிப்புக்கான வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளன என்று அரச அச்சக திணைக்களத்தின் தலைவர் பிரதீப் புஸ்பகுமார தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

339 உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான வாக்கெடுப்புக்கு ஒரு கோடியே 80 இலட்சம் வாக்காளர் அட்டைகளை தேர்தல்கள் ஆணைக்குழு கோரியிருந்த நிலையில் 30 இலட்சம் வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளன.

தபால்மூல வாக்கெடுப்பு மூன்றாம் வாரம் நடைபெறவுள்ளது. 109 உளளூராட்சி மன்றத் அதிகார சபைகளுக்கான தபால்மூல வாக்கெடுப்புக்குரிய வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளன. அத்துடன் நான்கு மாவட்டங்களுக்குரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளன.

தபால்மூல வாக்கெடுப்புக்கு தேவையான சகல வாக்காளர் அட்டைகளையும் நாளை சனிக்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்க எதிர்பார்த்துள்ளோம்.

இதேபோல் உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளை எதிர்வரும் 10 ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்க எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ஐ)

# தபால் மூலம் வாக்களிப்பதற்கு 7 இலட்சம் பேர் விண்ணப்பம்!

கொழும்பு, ஏப். 04

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சுமார் 7 இலட்சம் தபால்மூல வாக்கு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் கடந்த மார்ச் 3ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் கடந்த 17 ஆம் திகதி நிறைவடைந்தது.

இதனிடையே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பணிகளுக்கான அரசு அதிகாரிகள் குறித்த தகவல் கணக்கெடுப்பு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

இதன்படி, எந்தவொரு அரச அதிகாரியும் இன்று வரை தங்கள் தகவல்களை வழங்கவில்லை என்றால், அந்தத் தகவலை சம்பந்தப்பட்ட அதிகாரியின் பணிமனை அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்டத் தேர்தல் பணிமனைக்கு அவர்களின் நிறுவனத் தலைவரின் பரிந்துரைகளுடன் அனுப்புமாறு தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க அறிவுறுத்தியள்ளார். (ஐ)

## தமிழ், முஸ்லிம் மாணவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்!

### வவுனியா பல்கலை.மீது குற்றச்சாட்டு

வவுனியா, ஏப். 04

வவுனியா பல்கலைக்கழகத்தில் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்தில் மூவின மாணவர்களும் கற்கும் நிலையில் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர் நிகழ்ச்சி திட்டங்களில் புறக்கணிக்கப்படுகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தற்போது, பல்கலைக்கழக விளையாட்டு போட்டி இடம்பெற்று வரும் நிலையில் அனைத்து விளையாட்டு நிகழ்வுகளிலும் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் முழுமையாக புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

இது விடயத்தில் வவுனியா பல்கலைக்கழக நிர்வாகம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## போத்தல் குடிதண்ணீருக்கு சில்லறை விலை நிர்ணயம்!


கொழும்பு, ஏப். 04

போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீருக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயம் செய்யும் வர்த்தமானி அறிவித்தல் வெளியானது.



நுகர்வோர் விவகார அதிகார சபை இந்த வர்த்தமானி அறிவித்தலின்படி, 500-999 மில்லிலீற்றர் 70 ரூபாயாகவும் 1000 -1499 மில்லிலீற்றர் 100 ரூபாயாகவும் 1,500 -1,999 லீற்றர் 130 ரூபாயாகவும், 2,000 -2,499 மில்லிலீற்றர் 160 ரூபாயாகவும் 5,000-6,999 மில்லி லீற்றர் 350 ரூபாயாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 04 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - பங்குனி 21
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சப்தமி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தில் நிம்மதி உண்டு. எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். வியாபாரத்தில் போட்டிகள் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சிலவேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். அதிகாரிகள் அலைக்கழிக்கப்படுவார்கள். சகிப்பு தன்மை தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
மறைமுகவிமர்சனங்களும்தாழ்வுமனப்பான்மையும் வந்துச் செல்லும். உறவினர்கள், நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். சங்கடங்கள் வரும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கடகம்**
கடந்த கால இனிமையான அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். தைரியமாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**சிம்மம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் நம்பிக்கையை பெறுவீர்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். அதிரடி மாற்றம் உண்டாகும்நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப்போய் முடியும். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**விருச்சிகம்**
உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வாகனத்தை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் புதுபொறுப்புகளை ஏற்பீர்கள். தெளிவு பிறக்கும் நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வழக்கில் திடீர் திருப்பம்வரும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் கிடைக்கும். சில புதுமைகளை செய்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.


**மகரம்**
புதிய முயற்சி யாவும் வெற்றி அடையும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். சக ஊழியர்கள் உங்கள் வேலை களை பகிர்ந்து கொள்வீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கும்பம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**மீனம்**
சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

# மன்னாரில் சுகாதார சீர்கேட்டுடன் உணவுப் பொருட்கள் தயாரிப்பு!

## வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் அதிரடி நடவடிக்கை



மன்னார், ஏப். 04

மன்னார் மூர்வீதி பகுதியில் உள்ள பாழடைந்த வீடு ஒன்றில் மனித பாவனைக்கு உதவாத வகையில் சுகாதார சீர்கேடுகளுடன் உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு மன்னாரில் உள்ள உணவகங்களுக்கு விற்பனைக்காக வழங்கப்பட்டு வந்த நிலையில் குறித்த உணவு தயாரிக்கும் பாழடைந்த வீட்டை நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரூபன் லெம்பேட் தலைமையிலான குழுவினர் சுற்றி வளைத்துள்ளனர்.

மன்னார் மூர்வீதியில் மக்கள் வசிக்க முடியாத நிலையில் காணப்பட்ட குறித்த வீட்டில் பெருமளவிலான உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது.

உணவு பாதுகாப்பு சட்டத்துக்கு முரணாக குறித்த வீட்டில் உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டன. விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் அங்கிருந்து மனித பாவனைக்கு உதவாத வகையில் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களை கைப்பற்றினர்.

இவ்வாறு, கைப்பற்றப்பட்ட ஒரு தொகுதி உணவுப் பொருட்களை நீதிமன்றத்தின் அனுமதி பெற்று அழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், எவ்வித அனுமதியும் இன்றி மனித பாவனைக்கு உதவாத வகையில் உணவு தயாரித்த குறித்த நிலையத்தின் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த இடத்தில் தயாரிக்கப்படுகின்ற உணவுப் பொருட்கள் மன்னார் பகுதியில் உள்ள பல்வேறு உணவகங்களுக்கு விற்பனைக்காக வழங்கப்பட்டமையும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரூபன் லெம்பேட் தெரிவித்தார். (எ)

# உழவியந்திரம் மூலம் கரைவலை இழுக்க அனுமதி வழங்க கோரி இரகசிய கடிதம்!

## ஆழியவளையில் முறுகல் நிலை

யாழ்ப்பாணம், ஏப். 04

யாழ். வடமராட்சி கிழக்கு ஆழியவளை கடற்தொழிலாளர் சங்க எல்லைக்குள் உழவியந்திரத்தை பாவித்து கரைவலை தொழில் செய்வது தடை செய்யப்பட்ட போதிலும் தொடர்ந்து உழவியந்திரத்தை பாவித்து நபர் ஒருவர் தொழில் புரிந்து வருவதால் அங்கு முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 2024ஆம் ஆண்டு ஆழியவளை கடற்தொழிலாளர் சங்க எல்லைப் பகுதிக்குள் மனித வலுவற்று உழவியந்திரம் பாவித்து கரைவலை தொழில் புரிவது தடை செய்யப்பட்டு பொதுச்சபையாலும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இருப்பினும், பொதுச்சபையினதும் நீரியல்வளத் திணைக்களத்தினதும் சட்டதிட்டங்களை மீறி அப்பகுதியில் நபர் ஒருவர் அடாத்தாக உழவியந்திரத்தை பாவித்து தொடர்ந்து கரை வலை தொழில் புரிந்துவருவது மீனவர்கள் இடையே முறுகல் நிலையை ஏற்படுத்தி வருகின்றது.

பொதுச்சபையின் தீர்மானத்தை மீறி ஆழியவளை கடற்தொழிலாளர் சங்க நிர்வாகம் இரகசியமான முறையில் குறித்த கரைவலை முதலாளியின் உழவியந்திரத்துக்கு அனுமதி பெற்றுக் கொடுப்பதற்காக நீரியல் வளத்திணைக்கள அதிகாரிக்கு கடிதம் எழுதியது அம்பலமாகியுள்ளது.

அழுத்தம் காரணமாக ஆழியவளை கடற்தொழிலாளர் சங்கச் செயலாளர் பதவியிலிருந்து விலகிச் சென்றதால் கடந்த பொதுச் சபை கூட்ட தீர்மானத்தில் புதிய செயலாளர் ஒருவர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டிருந்தார்.

தேர்தல் காலமாக இருப்பதால் தேர்தல் முடியும்வரை தற்பொழுது தெரிவு செய்யப்பட்ட செயலாளருக்கு படகு பதிவு செய்தல், படகு விற்பனை, அங்கத்தவர்களுக்கு வங்கிக் கணக்கு பதிவு செய்தல் ஆகிய செயல்பாடுகளுக்கு கடிதம் வழங்கவே பொதுச்சபையால் அனுமதிக்கப்பட்டது.

இருப்பினும், ஆழியவளை கடற்தொழிலாளர் சங்க நிர்வாகம் மிக இரகசியமான முறையில் உழவியந்திரத்துக்கு அனுமதி கோரி நீரியல்வளத் திணைக்களத்துக்கும், பாதுகாப்பு கோரி மருதங்கேணி பொலிஸ் நிலையத்துக்கும் கடிதம் அனுப்பப்பட்டது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

ஆழியவளை கடற்தொழிலாளர் சங்க நிர்வாகத்தினரின் அண்மைக்கால செயல்பாடுகள் தமக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதால் அனைவரும் உடனடியாக பதவி விலக வேண்டுமென அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-05)

# ஆயிரம் தமிழ் சொற்களுக்கு ஆங்கில அர்த்தங்கள் இரண்டரை வயது சிறுமியின் அசாத்திய திறமை




யாழ்ப்பாணம், ஏப். 04

ஆயிரம் தமிழ் சொற்களுக்கு அதன் ஆங்கில அர்த்தங்களை சாதாரணமாக கூறி, சாவகச்சேரியைச் சேர்ந்த இரண்டரை வயது சிறுமி அசத்தியுள்ளார்.

சிறுமியின் இந்த அசாத்திய திறனை கின்னஸ் சாதனை புத்தகத்தில் பதிவதற்கான முயற்சியில் பெற்றோர் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், சாவகச்சேரியைச் சேர்ந்த ஜெயகரன் தர்ஷ்விகா என்ற இரண்டரை வயது சிறுமி காலநிலை, விலங்குகள், மின்னியல்சாதனங்கள், தொழில்கள் உள்ளிட்ட 1000இற்கும் அதிகமான சொற்களை தமிழில் கேட்கும்போது அவற்றுக்கான ஆங்கில அர்த்தங்களை மிகவும் அசாத்தியமாக கூறுகின்றார்.

சிறுமியின் தந்தை ஓட்டோ சாரதியாகவும் தாய் இல்லத்தரசியாகவும் உள்ளனர். பெரியளவிலான பின்புலங்கள் இல்லாத குடும்பத்தில் பிறந்த இந்த சிறுமி இதுவரை ஏடு தொடக்கப்படாத நிலையில் இத்தகைய அதிசிறந்த ஞாபகசக்தியை கொண்டுள்ளமை பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், சிறுமியின் சாதனை தொடர்பில் தெரிவிக்க, சிறுமியின் பெற்றோர் யாழ். ஊடக அமையத்தில் கடந்த முதலாம் திகதி ஊடக சந்திப்பொன்றை நடத்தினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டிசம் பாதிக்கும் குழந்தைகள் எண்ணிக்கை அதிகரிக்கின்றது!

கொழும்பு, ஏப். 04

ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் ஸ்வர்ணா விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு நாட்டில் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் 93 குழந்தைகளில் ஒருவருக்கு ஓட்டிசம் இருப்பது கண்டறியப்பட்டது.

ஓட்டிசம் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"2009 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் இலங்கையில் 93 குழந்தைகளில் ஒருவருக்கு இந்த நிலை இருப்பது கண்டறியப்பட்டது. அதன் பிறகு, அது முறையாக செய்யப்படவில்லை. இப்போது பயணம் தொடங்குகிறது. நமக்கு வேறு பெறுபேறுகள் கிடைக்கும்.

ஏனென்றால், இது உலகம் முழுவதும் ஒரு வளர்ந்து வரும் போக்கு காணப்படுகிறது. இலங்கையில் இந்நிலையை எதிர்கொள்ளும் குழந்தைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக நாங்கள் உணர்கிறோம்.

அதை விரைவாக அடையாளம் காண்பது முக்கியம். "ஆரம்ப நிலையிலேயே இதை நாம் அடையாளம் காண முடிந்தால், இரண்டரை முதல் ஐந்து வயதுக்குள் இதனை குணப்படுத்த முடியும் - என்றார்.

ஓட்டசம் என்றால் என்ன?

ஓட்டிசம் என்பது, வளரும் குழந்தையின் மூளை வளர்ச்சியில் ஏற்படக்கூடிய சிறிய மாற்றமாகும். குழந்தைகளின் மூளையானது, முதல் ஐந்து வருட காலப்பகுதியிலேயே, 80 சதவீதம் வளர்ச்சி அடைகின்றது.

அதனால், அந்த வயது காலத்திலேயே இந்த நோய் அறிகுறியைக் கண்ட றிந்தால், அவர்களை அந்நிலைமையிலிருந்து மாற்றிக் கொள்வது இலகு. இல்லாவிடின், குழந்தைகளின் தொடர்பாடல், சமூகத்துடனான நெருக்கத்தைப் போன்று, அவர்களுடைய நடவடிக்கைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தும். தொடர்பாடல் பிரச்னை, சமூகச் செயல்பாடுகளின் வீழ்ச்சி மற்றும் மீண்டும் மீண்டும் ஒரே விடயத்தைச் செய்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம், இந்நோயை அடையாளம் கண்டுகொள்ள முடியும். (ஐ)

# தமிழ் மக்களின் துயரங்களுக்கு தேசிய மக்கள் சக்தியே தீர்வு தரும்!

## ரஜீவன் எம். பி. சொல்கிறார்



யாழ்ப்பாணம், ஏப். 04

**நீண்ட காலமாக தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துயரங்களுக்கு தேசிய மக்கள் சக்தி மட்டுமே தீர்வு காணும் - இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன் தெரிவித்துள்ளார்.**

தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பகத்தை நவாலியில் திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு பயிரை விதையிட்டு வளர்த்து பின்னர் பூத்து காய், கனி தரும் வரை மக்கள் அந்த பயிரை பாதுகாத்து பலன் பெறுவர். அதே போன்று தேசிய மக்கள் சக்தியின் கனி களைப் பெறும் வரை மக்கள் ஆதரவு தந்து அதன் பயனைப் பெற வேண் டும்.

இந்த முறையும் மக்கள் தேசிய மக்கள் சக்தியின் வேட் பாளர்களை ஆதரித்து கிராமங்களை எம்முடன் இணைந்து மேம் படுத்த வேண்டும் - என்றார்.

(ஐ)

# 675 கிலோ பீடி இலைகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது

சிலாபம், ஏப். 04

கடற்படையினரின் விசேட தேடுதல் நடவடிக்கையில் சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 675 கிலோ பீடி இலைகள் மற்றும் டிங்கி படகுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடல் வழி ஊடாக மேற்கொள்ளப்படும் பல்வேறு ஆட்கடத்தல் மற்றும் சட்டவிரோத செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் பொருட்டு, கடற்படையினர் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கற்பிட்டி - பராமுனை கடற்பரப்பில் டிங்கி படகு ஒன்றை கடற்படையினர் சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டனர்.

இதன்போது, 675 கிலோ பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன.

அத்துடன், 27, 29 வயதுடைய சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சட்ட நடவடிக்கைகளுக்காக மதுவரி விசேட பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

அநுராதபுரம் விபத்து

# யாழ்.வாசி காலை இழந்தார்!

யாழ்ப்பாணம், ஏப். 04

ஏ-9 வீதியில் அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவர் காலை இழந்தார்.

சாவகச்சேரியை சேர்ந்த 44 வயது நபரே இவ்வாறு விபத்தில் காலை இழந்தவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த குடும்பஸ்தர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த லொறியில் முன்பக்கத்தில் இருந்து பயணித்துள்ளார்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த லொறி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றொரு லொறியுடன் மோதியது. இதில், அவர் படுகாயமடைந்தார். அத்துடன், அவரின் கால் சிதைவடைந்தது. இதைத் தொடர்ந்து அவரின் கால் சத்தி ரசிகிச்சை மூலம் அகற்றப் பட்டது.

இந்த விபத்து குறித்து அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஜனாதிபதி அநுரவுக்கு எதிராக தேர்தல் குழுவிடம் முறைப்பாடு

கொழும்பு, ஏப். 04

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களை தவிர்த்து ஏனைய வேட்பாளர்களை எவ்விதமான அடிப்படைகளும் இல்லாமல் ஊழல்வாதிகள் என்று ஜனாதிபதி குறிப்பிடுவது பிரதிவாதிகளுக்கு இழைக்கும் அநீதியாகும். தேசிய மக்கள் சக்தியின் தலைவர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிடுவது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு தமது சுயாதீன அதிகாரத்துக்கமைய உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணி தேர்தல்கள் ஆணைக் குழுவில் முறைப்பாடளித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிமனையில் முறைப்பாடளித்ததன் பின்னர் ஐக்கிய குடியரசு முன்னணியின் உப தலைவரான தீக்ஷன கம்மன்பில குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கடந்த மார்ச் 31 ஆம் திகதி வெலிகம பகுதியில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் "ஊழல், மோசடியற்ற குழுவினர் வெற்றி பெறும் பிரதேச சபைகளுக்கு மாத்திரமே, மத்திய அரசாங்கத்தினால் மானியங்கள் ஒதுக்கப்படும். அவ்வாறான குழு தேசிய மக்கள் சக்தியிடமே உள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் நிறைவேற்றுத்துறை அதிகாரமிக்க ஜனாதிபதி தனது அதிகாரத்தை நேரடியாக பயன்படுத்தி மத்திய அரசாங்கத்தால் மானியங்கள் வழங்குவது குறித்து தீர்மானிப்பது தேர்தலுக்கு அழுத்தம் பிரயோகிக்கும் ஒரு செயல்பாடாகும்.

ஜனாதிபதியின் கூற்றில் அரச அதிகாரிகள் தமது அரசியல் நோக்கங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படுவது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது முறையற்றதாகும். சுதந்திரமான முறையில் தமது வேட்பாளரை தெரிவு செய்யும் உரிமை வாக்காளர்களுக்கு உண்டு. தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை தவிர்த்து ஏனைய உறுப்பினர்களை ஊழல்வாதிகள் என்று குறிப்பிடுவது முறையற்றது - என்றார். (ஐ)

# பொது வழியில் சிரமம் ஏற்படுத்தும் வர்த்தகர்கள் மீது சட்டநவடிக்கை!

## கரவெட்டி பிரதேச சபை அறிவிப்பு



வடமராட்சி, ஏப். 04

வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச சபை ஆளுகைகுட்பட்ட பிரதேசத்தில் பண்டிகை காலத்தில் பொதுவழிக்கு சிரமம் ஏற்படுத்தும் வகையில் பொருட்களை காட்சிக்கு வைக்கப்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கடந்த காலங்களில் நெல்லியடி நகர மையப் பகுதிகளில் வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் குறிப்பாக பண்டிகைக் காலங்களில் பொதுவழிகளில் இடையூறு ஏற்படுத்தும் வகையில் பொருட்களை காட்சிப்படுத்துகின்றபோது வீதியோரமாக நடந்து செல்லும் பொது மக்களின் சுயாதீனமான நடமாட்டங்களுக்கு தடை ஏற்படுத்தப்பட்டுள்ளமையை தடுக்கும் நோக்கில் சபையின் உத்தியோகத்தர்கள் செயல்படுகின்ற போது அவர்களின் கடமைகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டு வந்துள்ளன.

எனினும், வீதி அபிருத்தி அதிகார சபையிடம் சில வர்த்தகர்கள் கடந்த பண்டிகைக் காலத்தில் கட்டணம் செலுத்தியமையால் இந்த விடயங்களில் பொதுப் பாதைகளில் ஏற்படுத்திய தொல்லைகளை பிரதேச சபையால் தடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. தற்போது வீதி அதிகார சபை பாராமரிப்பிலுள்ள வீதிகளில் வியாபாரம் செய்வதற்கு கட்டணங்களை வர்த்தகர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு முன்னராக பிரதேச சபையின் சிபாரிசை பெற்று வர்த்தகர்களின் கோரிக்கைகளை பரிசீலிக்குமாறு பிரதேச சபையால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையானது பிரதேச சபையின் சிபாரிசுகளை பெற்று வருமாறு பருத்தித்துறை வீதியில் தொல்லைகளை ஏற்படுத்த முனைபவர்களுக்கு (வர்த்தகர்களுக்கு) அறிவுறுத்துகிறது.

பிரதேச சபையானது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 65(3) பிரிவுக்கு அமைவாக சட்டவிரோதமாக வீதிக்கு தொல்லை ஏற்படும் வகையில் பொருட்களை காட்சிப்படுத்துகின்ற வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தல்களை எழுத்து மூலமாக வழங்கி வருகின்றார்கள்.

உடனடியாக பொது வழித் தொல்லைகளை அகற்றுவதற்கு உடன்படாத வர்த்தகர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் கணேசன் கம்ஸநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் நெல்லியடி நகர பகுதியில் பொதுமக்கள் நெருக்கடியின்றியும் இடையூறின்றியும் புத்தாண்டுக்கான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ஏதுவாக பொது வழித் தொல்லைகளை அகற்றுவதே மிக பிரதான கடமையாக உள்ளதாகவும் சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - இலங்கை உறவு வலுப்படுத்தப்பட வேண்டும்!

## முன்னாள் ஜனாதிபதி ரணில் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 04

**இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை வலுப்படுத்த வேண்டும். 2023, 2024 ஆம் ஆண்டுகளில் இந்திய - இலங்கை கூட்டு பிரகடனங்களின்படி நாம் செயல்பட வேண்டும். அதனை விடுத்து இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வருகையின்போது இந்திய திட்டங்களை இரத்து செய்வதாகக் கூறுவது பொருத்தமற்றது - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



விசேட அறிக்கை ஒன்றிலேயே அவர் இவற்றைத் தெரிவித்தார்.

2023 - 2024 கால கட்டத்தில் எமது அரசாங்கம் மீள்புதுப்பிக்கத்தக்க வலு சக்தி தொடர்பில் பல்வேறு முன்மொழிவுகளை அனுமதித்திருந்தோம். இலங்கையின் வலுசக்தி தேவையை அறிந்துதான் நாம் அந்தத் தீர்மானங்களை எடுத்தோம். அந்த வெளிநாட்டு முதலீடுகளுடன் நாட்டில் புதிய முதலீடுகளை ஏற்படுத்துவதற்கு அந்த வலுசக்தி திட்டங்களுக்கான முதலீடுகளும் கிடைக்கப்பெற்றன.

இந்த வேலைத்திட்டங்களை அங்கீகரித்த சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு வேலைத் திட்டங்களுக்காகவும் குழுக்கள் ஊடாக விலைகள் நிர்ணயிக்கப்பட்டன. அதற்கு பல்வேறு காரணிகளும் இருந்தன. அந்த காரணிகள் அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டே இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதானி நிறுவனம் மற்றும் ஹேலீஸ் நிறுவனம் தொடர்பில் தெரிவிக்க விரும்புகின்றேன். நாம் முதலில் நிதி அமைச்சினால் வேலைத்திட்ட குழுவொன்றை நியமித்தோம். அதன் பின்னர் இந்த நிறுவனத்துடன் கொடுக்கல் - வாங்கல்களை முன்னெடுப்பதற்காக அமைச்சரவையில் இந்த வேலைத்திட்டம் தொடர்பில் கலந்தாலோசித்து தீர்மானமொன்றை எடுப்பதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த குழுவின் அறிக்கைக்கு அமையவே இறுதி விலை தீர்மானிக்கப்பட்டது.

ஹேலீஸ் நிறுவனத்தின் வேலைத்திட்டம் 50 வோல்ட்ஸ் ஆகும். அதானி நிறுவனத்தின் வேலைத் திட்டத்துக்கும் இதற்குமிடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதற்கு பல்வேறு காரணிகள் உள்ளன. அந்த அனைத்து காரணிகள் தொடர்பிலும் ஆவணங்களால் மதிப்பாய்வு செய்வதற்காக அரசாங்கத்துக்கு இயலும். நாம் அனைத்தையும் அதிகாரிகள் மார்க்கத்திலேயே செய்திருக்கின்றோம்.

முதலில் புலம்பெயர்ந்த பறவைகள் பற்றிய ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. சுற்றுச்சூழல் நிலைமைகள் பறவைகளின் வருகையை பாதிக்கலாம். இதற்காக, மன்னாரில் ஹேலிஸ் திட்டம் குறித்து அரசாங்கம் ஒரு ஆய்வை நடத்தியது. அதைச் செய்ய அதானி பணம் செலுத்த வேண்டியிருந்தது.

இரண்டாவது நிலத்தை கையகப்படுத்துவதாகும். நிலத்தை கையகப்படுத்தும் போது, மின்சார சபையின் சொந்த நிலத்தை மன்னாருக்கு வழங்க முடிவு செய்தோம். அதை ஹேலீஸ் நிறுவனம் பெற்றது. அதானி நிறுவனம் அந்த நிலத்தை வாங்க வேண்டியிருந்தது.

மன்னார் தொடர்பில் இலங்கை மின்சார சபை ஒரு சாத்தியக்கூறு ஆய்வை நடத்தியது. ஆனால், அதானி அதற்கு புதிதாக பணம் செலுத்த வேண்டியிருந்தது. மேலும், மன்னாருக்கான மின்சார உரிமம் மின்சார சபையால் செயல்படுத்தப்பட்டது. அதானி நிறுவனத்துக்கு பணத்தை வழங்கி அந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருக்கலாம். மன்னார் திட்டத்தில் அவர்களுக்கு வழங்குவதற்காக இவை அனைத்தையும் நாங்கள் தயார் செய்திருந்தோம்.

திட்டங்கள் நிறுத்தப்பட்டால், அதற்கான காரணங்களை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். அவ்வாறில்லையெனில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதன் பொருள் அதானி இலங்கை மற்றும் இந்தியாவின் சட்டங்களை மீறிவிட்டது என்பதா? அதுதான் குற்றஞ்சாட்டப்படுகிறதா? இந்திய பிரதமர் வரவிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறு திட்டங்களை இரத்து செய்வது பொருத்தமானதல்ல - என்றுள்ளது.

(ஐ)

## பண மோசடி மூவர் கைது!

கொழும்பு, ஏப். 04

இலங்கை ஆயுள்வேத மருந்து கூட்டுத்தாபனத்தில் மென்பொருள் தரவுகளை மாற்றி காசோலை மூலம் 270 கோடியே 31 இலட்சத்து 2 ஆயிரத்து 415 ரூபாயை மோசடி செய்த குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் கடந்த 20 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் அளித்த முறைப்பாட்டுக்கு அமையவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நடத்தப்பட்ட விசாரணையின்படி, பணத்தை மோசடி செய்த சந்தேக நபரும், அவருக்கு உதவிய இரண்டு பெண் சந்தேக நபர்களும் கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்டனர். (ஐ)

## சி. ஐ. டி விசாரணை வளையத்தில் 22 பேர்

கொழும்பு, ஏப். 04

ஜனாதிபதி நிதியத்தின் நிதியை முறைகேடாக பயன்படுத்தினர் என்று கூறப்படும் 22 பேர் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் "பி" அறிக்கையை சமர்ப்பித்து இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியவர்களுள் பிரபல அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவித்துள்ளது. (ஐ)

## இது அச்சப்படும் தருணமல்ல!

### அமெரிக்காவின் புதிய வரி குறித்து பிரதி வெளிவிவகார அமைச்சர்!

கொழும்பு, ஏப். 04

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் புதிய வரி அறிவிப்பு அமெரிக்காவுடன் நீண்டகால உறவுகளை கொண்ட இலங்கை போன்ற நாடுகளை உள்ளடக்கிய சர்வதேச வர்த்தகத்துக்கு புதிய அழுத்தங்களை ஏற்படுத்தியுளளது - என்று தெரிவித்துள்ள பிரதிவெளிவிவகார அமைச்சர் அருண் ஹேமசந்திர இது அச்சப்பட வேண்டிய தருணமில்லை என தெரிவித்துள்ளார்

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு,இலங்கையின் வரிகட்டமைப்பு ஓரிரவில் ஏற்படுத்தப்பட்டதல்ல. இது கடந்த காலகொள்கை வழிகாட்டுதல்களால் வடிவமைக்கப்பட்ட ஒரு கட்டமைப்பை பிரதிபலிக்கின்றது. ஆனால், இதற்கு சிந்தனையுடன் சீராக மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு தீர்வு காணும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம்.

உலகளாவிய சந்தையில் தங்கள் இடத்தை பெறுவதற்கு எங்கள் ஏற்றுமதியாளர்கள், தொழிலாளர்கள், தொழில்மு



னைவோர் எவ்வளவு கடினமாக உழைத்துள்ளனர் என்பதை நாங்கள் அறிவோம். இந்த அரசாங்கம் அந்த முயற்சிகளை பாதுகாப்பதற்கான அனைத்தையும், அவதானமான இராஜதந்திர முயற்சிகள், நடைமுறை செயல்பாடுகள், எங்கள் சர்வதேச சகாக்களுடன் இணைந்து செயல்படுதல் ,போன்றவற்றின் மூலம் செய்யும்.

நாங்கள் எங்கள் பொருளாதாரத்தையும் எதிர்காலத்தையும் பாதுகாப்போம். இது அச்சப்படவேண்டிய தருணம் இல்லை. இது கவனத்தை குவிக்கவேண்டிய தருணம்.

நாங்கள் கவனம் செலுத்திவருகிறோம். இலங்கை அமைதியாக, நம்பிக்கையுடன் இணைந்து முன்னேறும் - என்றும் கூறினார். (ஐ)

## முக்கொலை சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஏப். 04

அம்பாந்தோட்டை - அம்பலாந்தோட்டை- எலேகொட மேற்கு பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி இடம் பெற்ற முக்கொலைச் சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வந்த சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் புதன் கிழமை குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அம்பலாந்தோட்டை பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், சந்தேகநபர் நேற்றுமுன்தினம் மாலை பியகம பொலிஸ் பிரிவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் அம்பலாந்தோட்டை மாமடல பகுதியை சேர்ந்த 42 வயதுடையவராவார்.

இரு தரப்பினரிடையே ஏற்பட்ட தகராறில் கூர்மையான ஆயுதங்களால் தாக்கப்பட்டதில் மூன்று பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஏ. ஐ. மூலம் பெண்களின் நிர்வாண படங்களை உருவாக்கியவர் கைது!

கொழும்பு, ஏப். 04

செயற்கை நுண்ணறிவை (ஏ. ஐ.) பயன்படுத்தி இரண்டு பெண்களின் சாதாரண படங்களை நிர்வாணப் படங்களாக மாற்றிக் கொடுத்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குற்றப் புலனாய்வு துறையின் அநுராதபுர துணைப் பிரிவினரால் சந்தேக நபர் கடந்த 29 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அநுராதபுரம், சாலியபுர பகுதியைச் சேர்ந்த 20 வயதுடையவராவார்.

சந்தேக நபர் அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பூஸா சிறையில் சோதனை ஹெரோயின் கைப்பற்றல்!

கொழும்பு, ஏப். 04

பூஸா சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் ஹெரோயின் போதைப்பொருள் உட்பட பல்வேறு பொருட்கள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் சிறைச்சாலையில் உள்ள சிறைக்கூண்டுகள் மற்றும் ஏனைய பகுதிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது, 8 கைபேசிகள், 6 சார்ஜர்கள், 5 சிம் அட்டைகள், 5 ஹெட்செட்கள், 3 ரவுட்டர்கள், 27 லைற்றர்கள், 9 டேற்றா கேபிள்கள், மற்றும் 2 கிராம் 850 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் என்பன பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சிறைச்சாலை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸ் போதைப்பொருளுடன் பெண் உட்பட நால்வர் கைது

கொழும்பு, ஏப். 04

நாடளாவிய ரீதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் ஐஸ் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேலியகொடை பொலிஸ் பிரிவில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் 11 கிராம் 500 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த 51 வயதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, மொறட்டுவை பொலிஸ் பிரிவின் கோரலவெல்ல பகுதியில் 10 கிராம் 760 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், 10 கிராம் 430 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 10 கிராம் 280 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கோரலவெல்ல பகுதியைச் சேர்ந்த 24 மற்றும் 45 வயதுடைய ஆண் சந்தேகநபர்களும் 34 வயதுடைய பெண் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# பாதாள குழு உறுப்பினரின் சகா பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஏப். 04

பாதாள உலக கும்பலை சேர்ந்த போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரின் சகா ஒருவர் களுத்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபர் களுத்துறை - நாகொடை பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் களுத்துறை, கித்துலாவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். சந்தேக நபரிடமிருந்து துப்பாக்கி, மற்றும் 3 தோட்டாக்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொலை சம்பவம் ஒன்று தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ஐ)

# யாழ்ப்பாணம், அநுராதபுரம், கண்டி தேசிய கலாசார நகரங்களாக மாறும்!

## பிரதமர் ஹரிணி யுனெஸ்கோவில் உறுதி




பாரிஸ், ஏப். 04

**எதிர்காலத்தில் இலங்கையின் யாழ்ப்பாணம், அநுராதபுரம், கண்டி ஆகிய 3 நகரங்களையும் தேசிய கலாசார நகரங்களாக அபிவிருத்தி செய்வதற்கு எமது அரசு திட்டமிட்டுள்ளது - என்று பிரான்ஸில் இடம்பெற்ற யுனெஸ்கோ சர்வதேச மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

பிரான்ஸிலுள்ள யுனெஸ்கோ தலைமையகத்தில் ஏப்ரல் முதலாம் திகதி "இலங்கையின் உலக மரபுரிமை சொத்தான அநுராதபுரம் புனித நகரத்தை பாதுகாப்பதற்கான ஒன்றிணைந்த மற்றும் நிலையான அணுகுமுறை" என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற சர்வதேச நிபுணர்களின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு, ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ஓத்ரி அசூலே கடந்த ஜூலை மாதம் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த பயணத்தின் பிரதிபலனாக அனுராதபுரத்தை பாதுகாக்கும் வகையில் இந்த மாநாடு இடம்பெறுகிறது.

யுனெஸ்கோ மற்றும் இலங்கைக்கு இடையிலான நீண்டகால ஒத்துழைப்பை பலப்படுத்துவதற்கும் கலாசாரங்களுக்கு இடையிலான உரையாடல், மரபுரிமைகளை பாதுகாத்தல், கல்வி, நிலைபேறான அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியை முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் இந்த மாநாடு கைகொடுக்கும்.

எதிர்கால சந்ததியினருக்கென கலாசார பாரம்பரியத்தை பாதுகாத்து முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை பலப்படுத்துவதற்கு உலகளாவிய தலைவராக யுனெஸ்கோவின் ஒத்துழைப்பு இலங்கைக்கு முன்னரை விடவும் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படும் காலப்பகுதியில் நாம் உள்ளோம்.

கலாசாரத்திற்கென முன்னர் இல்லாத மகத்தான வரவேற்பைப் பெறுதல், உலக அமைதி, அபிவிருத்திக்கான அறிவுத்திறன் மற்றும் புத்தாக்கங்களை பயன்படுத்தல், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை உயர் நெறிமுறைகளுடன் கையாளுதல், நிலைபேறான கல்வி, சமுத்திர உயிரியல் பல்வகைத்தன்மை மற்றும் பாதுகாப்பு, காலநிலை மாற்றத்திற்கு ஈடுகொடுக்கும் திறனை மேம்படுவதற்காக யுனெஸ்கோ எடுக்கும் நடவடிக்கைகள் மிகவும் முக்கியமானவை என்பதுடன் காலத்திற்கு ஏற்றவை.

எமது அரசு இனவாதத்தை புறக்கணிக்கிறது. அனைவருக்கும் சமமான உரிமைகளுடன் அனைவரையும் ஒன்றிணைக்கும் சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கே அரசாங்கம் முயற்சிக்கிறது.

குரோத அரசியல் இலாபங்களுக்கு எதிராக வும், மக்கள் பிளவுபடுவதை விரும்பாதவர்களுமே இந்த தேசிய மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றியுள்ளனர்.

எதிர்காலத்தில் இலங்கையின் அநுராதபுரம், யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய 3 நகரங்களையும் தேசிய கலாசார நகரங்களாக அபிவிருத்தி செய்வதற்கு எமது அரசு திட்டமிட்டுள்ளது - என்றும் கூறினார். (ஐ)

# கடல்சார் போக்குவரத்து ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்து

கொழும்பு, ஏப். 04

கடல்சார் போக்குவரத்து ஒத்துழைப்புக்கான பிம்ஸ்டெக் ஒப்பந்தத்தில் இலங்கையும் கைச்சாத்திட்டது.

பிம்ஸ்டெக் 20ஆவது உச்சி மாநாடு தாய்லாந்தின் பாங்கொக்கில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக கடல்சார் போக்குவரத்து ஒத்துழைப்புக்கான ஒப்பந்தத்தில் பிம்ஸ்டெக்கில் அங்கம் வகிக்கும் வெளிவிவகார அமைச்சர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.




இந்த மாநாட்டில் இலங்கை சார்பாக பிரதி வெளிவிவகார அமைச்சர் அருண் ஹேமச்சந்திர பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புத்தாண்டை முன்னிட்டு விசேட ரயில் சேவைகள்!

கொழும்பு, ஏப். 04

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கொழும்பிலிருந்து சொந்த ஊருக்கு திரும்புவோரின் வசதி கருதி எதிர்வரும் 11ஆம் திகதி முதல் விசேட ரயில் சேவைகளை முன்னெடுக்கவுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விசேட ரயில் சேவை இரண்டு கட்டங்களாக இயக்கப்படும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் 11, 12, 13 ஆம் திகதிகளில் கொழும்பிலிருந்து பதுளை, அநுராதபுரம், காலி, கண்டி மற்றும் பெலியத்தை ஆகிய இடங்களுக்கு ரயில் சேவை இயக்கப்படும்.

புத்தாண்டு விடுமுறையின் பின்னர், கொழும்புக்குத் திரும்புபவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக 18, 19, 20ஆம் திகதிகளில் இரண்டாம் கட்ட விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட வுள்ளன.

இதேவேளை, புத்தாண்டை முன்னிட்டு மேலதிகமாக 500 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என்று இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 10 இலட்சம் ரூபாய் மதிப்பிலான போதைப்பொருளுடன் யுவதி கைது!

கொழும்பு, ஏப். 04

10 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான போதைப் பொருளுடன் யுவதி ஒருவரை மதுவரி திணைக்கள போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கம்பஹா, யாகொட பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையிலேயே இந்தப் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தக் கைது நடவடிக்கையானது, நீண்டகால விசாரணைக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்டதாக மதுவரி திணைக்களத்தின் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர். குறித்த யுவதி கடந்த 7 வருடங்களாக போதைப் பொருளை விற்பனை செய்து வந்துள்ளார் என்றும் கைதான யுவதியின் பெற்றோரும் போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்றும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

யுவதி கைதானமையை அடுத்து அவரின் பெற்றோர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

அத்துடன், யுவதியிடம் கைப்பற்றப்பட்ட குறிப்பு புத்தகம் ஒன்றில் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்களின் பெயர் விவரங்கள் கிடைத்துள்ளன என்றும் மதுவரி திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

சித்திரவதை கொலைகளை விசாரிக்க கோரி

# பட்டலந்த வதை முகாமின் நேரடி சாட்சி ஒருவர் மனு!

கொழும்பு, ஏப். 04

பட்டலந்த வதை முகாமுடன் தொடர்புடைய நேரடி சாட்சி என்று தன்னை அடையாளப்படுத்தி நபர் ஒருவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் (சி. ஐ. டி) மனு ஒன்றை கையளித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை சி. ஐ. டிக்கு வருகை தந்தவரே மனுவை கையளித்தார். அதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,பட்டலந்த வதை முகாம் போன்ற பல வதை முகாம்களில் நடந்த கொடூரங்கள் தொடர்பில் இதுவரை ஊடகங்கள் வாயிலாக பொதுமக்களுக்கு தெரிவித்து வந்தபோதும் அதை கவனத்தில் கொள்ளவில்லை. ஆகையால், இன்று (நேற்றுமுன்தினம்) சி. ஐ. டியில் மனு ஒன்றை கையளித்துள் ளேன்.

கண்முன் நடந்தேறிய கொடூரங்களையே தெரிவித்திருந் தேன். பல வருடங்களாக இரா ணுவ, பொலிஸ் பிரிவின் நிரந்தர புகைப்பட கலைஞராக பணியாற்றியுள்ளேன். கொழும் பில் இருந்த வதை முகாம்கள் மற்றும் பட்டலந்த வதை முகாமுக்கு கைதுசெய்யப்பட்டு கொண்டுவரப்பட்ட நபர்கள், கண்முன்னே சித்திரவதை அளித்து கொடூரமாக கொலை செய்யப்பட்டமை தொடர்பில் 1996 ஆம் ஆண்டு ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியம் அளித்திருந்தேன்.60 ஆயிரம் உயிர்கள் பறிக் கப்பட்டமைக்கு நீதி வழங்க வேண்டிய காலம் இது- என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின்மீது தாக்குதல் பெண் உட்பட அறுவர் கைது!

## ஒருவர் விளக்கமறியலில், இருவர் தலைமறைவு

திருகோணமலை, ஏப். 04


**நிலாவெளி பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த இளைஞர் குழுவினர், பொலிஸாரை வீடொன்றினுள் இழுத்துச் சென்று அடைத்து வைத்து தாக்கினர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஆறு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

திருகோணமலை மாவட்டம் நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த 31 ஆம் திகதி திங்கட்கிழமை தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவரை போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் அதிகாரிகள் நிறுத்த முயன்ற நிலையில், அப்பகுதியில் ஒன்று கூடிய இளைஞர் குழுவினர் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்திருந்ததுடன், அதிகாரிகளை அக்குழுவினர் வீதியிலிருந்து வீடொன்றினுள் இழுத்துச் சென்று தாக்கியிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் மார்ச் 31 ஆம் திகதி பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டு ஏப்ரல் 3 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் அப்பகுதியிலிருந்து வெளியேறியிருந்த நிலையில் கடந்த முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை பெண் ஒருவர் உட்பட 6 சந்தேகநபர்கள் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிலாவெளி பகுதியைச் சேர்ந்த 20, 21, 22, 28, 35 மற்றும் 48 வயதுடைய சந்தேகநபர்களே இவ்வாறு கைதாகியுள்ளனர். மேலும், சம்பவத்துடன் தொடர்புடைய தப்பியோடிய இரு சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் நிலாவெளி பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ)



# கடற்றொழிலாளர்களுக்கு மானிய அடிப்படையில் உதவி

உடப்பு, ஏப். 04

கடற்றொழிலாளர்களுக்கு மானிய அடிப்படையில் பல உதவிகள் வழங்கப்படவுள்ளதாக துறைசார் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

உடப்பு இந்து ஆலய பரிபாலன சபை மற்றும் உடப்பு மீன்பிடிச் சங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் சந்திரசேகர் கலந்து கொண்டார். அமைச்சரை வரவேற்கும் நிகழ்வு கூட்டம் உடப்பு இந்து கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் உரையாற்றிய அமைச்சர், இந்தக் கிராமத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை எமது அநுர குமார திஸநாயக்க அரசு முன்னெடுக்கும். கடற்றொழிலாளர்களுக்கு மானிய அடிப்படையில் பல உதவிகளையும் செய்யும். அத்துடன், இந்த ஊரில் குறைபாடுகள் ஏதும் இருந்தால் என்னிடம் எந்த நேரமும் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும் என்றும் குறிப்பிட்டார். இதன்போது, மீன்பிடி சங்கத் தலைவர்களால் அமைச்சரிடம் மகஜர்களும் கையளிக்கப்பட்டன. (எ)

# இலங்கை அணி தலைவராக ஆசிரியர் தேவகுமார் தெரிவு

காரைதீவு, ஏப். 04

சர்வதேச இளம் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி மகாநாட்டில் இலங்கை அணியின் தலைவராக விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் செல்வராஜா தேவகுமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பைச் சேர்ந்த இவர் களுவாஞ்சிக்குடி பட்டிருப்பு தேசிய பாடசாலை ஆசிரியராவார்.

தாய்லாந்தில் எதிர்வரும் ஏப்ரல் 5 முதல் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள சர்வதேச இளம் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி மகாநாட்டில் - போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றச் செல்லும்



இலங்கை அணியின் தலைவராகவே தேவகுமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (எ- 07)

# சாய்ந்தமருது, கல்முனை வீதிகளில் மின் விளக்கு தொகுதி புனரமைப்பு

கல்முனை, ஏப். 04

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதான வீதியில் கடந்த பல வருட காலமாக ஒளிராமல் செயலிழந்து காணப்பட்ட பெரிய மின் விளக்கு தொகுதிகள் கல்முனை மாநகர சபையால் தற்போது துரிதமாக திருத்தம் செய்யப்பட்டு வீதிக்கு ஒளியூட்டப்பட்டுள்ளது.

குறித்த மின் விளக்கு தொகுதிகள் செயலிழந்திருந்தமையால் சாய்ந்தமருது நகரின் ஒரு பகுதி இருள் சூழ்ந்து காணப்பட்ட நிலையில், அண்மையில் நடைபெற்ற சாய்ந்தமருது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொது மக்கள் மற்றும் வர்த்தகர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ. ரி. எம். றாபியால் உறுதியளிக்கப்பட்டதற்கு அமைவாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சாய்ந்தமருது நுழைவாயில் சந்தி தொடக்கம் அல்ஹிலால் பாடசாலை சந்தி வரையான பிரதான வீதியில் செயலிழந்திருந்த மீயுயர் மின் கம்பங்கள் மற்றும் இணைப்புகள் திருத்தம் செய்யப்பட்டு, பிரகாசமான மின் விளக்குகள் புதிதாக பொருத்தப்பட்டு, ஒளியூட்டப்பட்டுள்ளன.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.ரி. எம். றாபி தலைமையில் நடைபெற்றது. இதில் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவும் கலந்து கொண்டிருந்தார்.

இதேவேளை, கல்முனை மாநகர பிரதான வீதியின் சில இடங்களில் செயலிழந்து காணப்பட்ட மின் விளக்கு தொகுதிகளும் புனரமைப்பு செய்யப்பட்டு வீதிக்கு ஒளியூட்டப்பட்டுள்ளன. (எ- 01)

# சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் கண்புரை அறுவை சிகிச்சை மீள ஆரம்பம்

சம்மாந்துறை, ஏப். 04

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் கண்புரை அறுவை சிகிச்சை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிதாக நியமனம் பெற்ற கண் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணரால் சத்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் கண் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணராக கடமையாற்றிய டி. சன்ட்ருவான் இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து கண்புரை அறுவை சிகிச்சை நடவடிக்கைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்தன.

இதையடுத்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீன் மேற்கொண்ட முயற்சி காரணமாக தற்பொழுது கண் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணராக நியமனம் பெற்ற டபிள்யூ. அரவிந்தால் இந்த சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வைத்திய நிபுணர் அரவிந், கடந்த 28 ஆம் திகதி முதலாவது கண்புரை அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டார். குறித்த சத்திர சிகிச்சையை மீள ஆரம்பிப்பதற்கும் அந்த சேவையை மேம்படுத்தி பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் தேவையான மருத்துவ உபகரணங்களும் சம்மாந்துறை ஆதார மருத்துவமனைக்கு வழங்கப்பட்டன. (எ-06)

# முதியோருக்காக அஜா இல்லம்

கல்முனை, ஏப். 04

குடும்பத்தால் கைவிடப்பட்ட அல்லது தனிமையை உணர்கின்ற முதியோர்களுக்காக அம்பாறை மாவட்டம் கல்முனையில் அஜா இல்லம் நாளை சனிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

அஜா இல்ல ஸ்தாபகர் திருமதி சோதினி அருள்ராஜ் தலைமையில் நடைபெறவிருக்கும் இத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி. ஜே. அதிசயராஜ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (எ)

# போதைப்பொருள் வர்த்தகர் காத்தான்குடியில் சிக்கினார்

மட்டக்களப்பு, ஏப். 04

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நூராணியா பகுதியில் 10 கிராம் 420 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் பிரபல போதைப் பொருள் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த சந்தேகநபர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 10 கிராம் 420 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள், 10,700 ரூபாய் பணம், 5 வங்கிகளின் ஏ. ரி. எம். அட்டைகள், போதைப் பொருளை தரம் பிரிக்கும் இயந்திரம், கைப்பை உட்பட பல பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ)



# சம்மாந்துறையில் வீதியை விட்டு விலகிச் சென்ற வாகனம் விபத்து

சம்மாந்துறை, ஏப். 04

சாரதி உறங்கியதால் வீதியை விட்டு விலகிச் சென்ற வாகனம் விபத்தில் சிக்கியது.

கல்முனை - அம்பாறை பிரதான வீதியில் சம்மாந்துறை, ஆண்டியசந்திக்கு அருகாமையில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை வேளையில் இடம்பெற்ற இந்த விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.


அம்பலாங்கொடை பகுதியிலிருந்து மீன்களை ஏற்றிக் கொண்டு மாளிகைக்காடு பகுதிக்குச் சென்ற கூலர் வாகனமே சாரதியின் உறக்கம் காரணமாக வீதியை விட்டு விலகி அருகில் உள்ள சுவரில் மோதியது.

இவ்விபத்தில் காயமடைந்த சாரதி சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்வானை சுற்றி சீன இராணுவம் 2ஆவது நாளாக தீவிர போர் பயிற்சி



தைபே சிற்றி, ஏப். 04


**தாய்வானை சுற்றி நேற்று 2ஆவது நாளாக சீன இராணுவம் தீவிர போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. இதனால், அங்கு பதற்றம் அதிகரித்துள்ளது.**

1949இல் தனி நாடாக பிரிந்து சென்ற தாய்வானை மீண்டும் இணைக்க சீனா முயற்சித்து வருகிறது. இதற்காக தாய்வான் அருகே அடிக்கடி போர்ப் பயிற்சி மற்றும் எல்லைக்குள் போர் விமானங்களை அனுப்பி பதற்றத்தை தூண்டுகிறது. தாய்வான் எல்லை பகுதியில் சீனாவின் அத்துமீறல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சு குற்றஞ் சாட்டியுள்ளது.

இந்த நிலையில், தாய்வானை அச்சுறுத்தும் வகையிலும், தாய்வானை சுற்றி பாதுகாப்பு பயிற்சிகளை மேற்கொள்ளும் வகையிலும் தனது இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படையை சீனா அனுப்பியுள்ளது.

நேற்றுத் தொடர்ந்து 2ஆவது நாளாக தாய்வானை சுற்றி சீன இராணுவம் தீவிர போர்ப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. இந்தப் பயிற்சியில் சீன கடற்படைக்கு சொந்தமான போர்க் கப்பல்கள் மற்றும் போர் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பிரிவினைவாத அச்சுறுத்தல்களுக்கு எதிராக இந்தப் போர்ப் பயிற்சி மேற்கொள்ளப்படுவதாக சீன இராணுவம் தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# முழு அதிகாரமும் வேண்டும் பிக்குகள் அமைதிப் பேரணி



புதுடில்லி, ஏப். 04

மகா போதி கோவில் நிர்வாகக் குழுவில் இருந்து இந்துக்களை நீக்கக்கோரி பிக்குகள் அமைதிப் பேரணி நடத்தினர்.

இந்தியாவின் பிஹார் மாநிலம் புத்த கயாவில் உள்ள மகா போதி கோவிலை நிர்வகிக்க, மகா போதி கோவில் சட்டத்தை 1949ஆம் ஆண்டு பிஹார் மாநில அரசு இயற்றியது. இந்தச் சட்டத்தின்படி, மகா போதி கோவிலின் நிர்வாகக் குழுவில் பௌத்தர்கள் மற்றும் இந்துக்கள் தலா 4 பேரை பிஹார் அரசு நியமிக்கிறது. இந்த நிலையில், கோவில் நிர்வாகக் குழுவில் இந்துக்கள் இருக்கக் கூடாது. முழு அதிகாரமும் தங்களுக்கே வழங்கப்பட வேண் டுமென மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் நேற்று முன்தினம் பிக்குகள் அமைதிப் பேரணி நடத்தினர். (எ)

# இஸ்ரேலில் அமெரிக்க பொருட்களுக்கு அனைத்து இறக்குமதி வரிகளும் இரத்து

டெல் அவிவ், ஏப். 04

அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான அனைத்து இறக்குமதி வரிகளையும் இரத்துச் செய்ய இஸ்ரேல் அரசு முடிவு செய்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக 2ஆவது முறையாக பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், பல நாடுகளுக்கு அதிர்ச்சி ஏற்படுத்தும் வகையில் வரி விதிப்புகளை அமுல்படுத்தி வருகிறார். கனடா, மெக்சிக்கோ நாடுகளுக்கு 25 சதவீத கூடுதல் வரியும், சீனாவுக்கு 10 சதவீதம் கூடுதல் வரியும் விதித்து உத்தரவிட்டார். பெப்ரவரி முதலாம் திகதி முதல் இந்த வரி விதிப்பு அமுலுக்கு வந்தது.

இந்த நிலையில், இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் மீது 100 சதவீத வரி விதிப்பை அமுல்படுத்தும் முடிவை ட்ரம்ப் அரசு எடுத்துள்ளது.

ட்ரம்பின் வரி விதிப்பு முடிவுக்கு இடையே, ஐரோப்பிய யூனியன் மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகள் அமெரிக்கா மீது விதித்த வரிகளை குறைத்துள்ளன என்று செய்திகள் வெளியான சூழலில், இஸ்ரேலும் வரி இரத்து பற்றிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, நிதி அமைச்சர் பிஜாலெல் ஸ்மோத்ரிச் மற்றும் பொருளாதார மற்றும் தொழில் துறை அமைச்சர் நிர்பர்கத் உத்தரவின்பேரில் அமெரிக்க தயாரிப்பு பொருட்கள் மீது விதிக்கப்பட்ட அனைத்து சுங்க வரிகளும் இரத்துச் செய்யப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்புதலை அந்த நாட்டின் பாராளுமன்றத்துக்கான நிதிக் குழு வழங்கியுள்ளது. (எ)

# பணக்காரர்கள் பட்டியலில் எலான் மஸ்க் முதலிடம்!

## 18 ஆவது இடத்தில் அம்பானி



வாஷிங்டன், ஏப். 04

போர்ப்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள உலக பணக்காரர்கள் பட்டியலில் டெஸ்லா நிறுவுநர் எலான் மஸ்க் முதலிடம் பிடித்துள்ளார்.

பிரபல போர்ப்ஸ் பத்திரிகை 39ஆவது உலக பணக்காரர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் 3,000இற்கும் அதிகமானோர் இடம்பிடித்துள்ளனர். இந்த பட்டியலில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 247 பேர் கூடுதலாக இடம் பிடித்துள்ளனர்.

எலான் மஸ்க் சொத்து மதிப்பு 342 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். கடந்த ஓராண்டு காலத்தில் இவரின் சொத்து மதிப்பில் 147 பில்லியன் டொலர்கள் சேர்ந்திருப்பதாக போர்ப்ஸ் கூறியுள்ளது. அமெரிக்க அரசின் செயல் திறன் துறையின் தலைவராகவும் எலான் மஸ்க் உள்ளார்.

அடுத்ததாக மெட்டா (பேஸ்புக்) நிறுவனத்தின் தலைவர் மார்க் ஜூக்கர்பர்க் 216 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சொத்து மதிப்புடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். முதல் முறையாக இவர் இந்த பட்டியலில் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளார். அமேசான் நிறுவுநர் ஜெப் பெசோஸ் 215 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சொத்து மதிப்புடன் மூன்றாவது இடத்தையும், ஒராக்கில் நிறுவனத்தின் லாரி எலிசன் 192 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சொத்து மதிப்போடு நான்காவது இடத்தையும் பிடித்துள்ளார். 178 பில்லியன் அமெரிக்க டொலர்களோடு அர்னார்ட் பெர்னால்ட் இந்த பட்டியலில் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

உலகளவில் அமெரிக்காவில் தான் அதிக பணக்காரர்கள் உள்ளனர். அங்கு 902 பில்லினியர்களும், சீனாவில் 516 பில்லினியர்களும் உள்ளனர். இந்தியாவில் 205 பில்லியனியர்கள் இடம் பெற்றுள்ளனர். பிரபல ஹாலிவுட் நடிகர் அர்னால்ட் முதன்முறையாக உலக பணக்காரர்கள் பட்டியலில் இடம்பிடித்துள்ளார். முதல் 10 பட்டியலில் பெரும்பாலானவர்கள் அமெரிக்காவை சேர்ந்தவர்களாகவே உள்ளனர்.

இந்தியாவின் ரிலையன்ஸ் குழுமத் தலைவர் முகேஷ் அம்பானி இந்தப் பட்டியலில் 18ஆம் இடம் பிடித்துள்ளார். கடந்தாண்டு 116 பில்லியன் டொலராக இருந்த அம்பானியின் சொத்து மதிப்பு தற்போது 92.5 பில்லியன் டொலராக குறைந்துள்ளது. (எ)

மியன்மாரில் நிலநடுக்கம்

# ஐந்து நாட்களுக்கு பின்னர் இளைஞன் உயிருடன் மீட்பு

நேபிடாவ், ஏப்.04

மியன்மாரில் நிலநடுக்கத்தில் சிக்கிய இளைஞன் ஒருவர் ஐந்து நாட்களுக்குப் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

மியன்மாரில் கடந்த 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 7.7 ஆக பதிவான இந்த நிலநடுக்கம் தலைநகர் நேபிடாவ், மண்டலே ஆகிய நகரங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

நிலநடுக்கத்தால் கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின. இந்த நிலநடுக்கத்தில் சிக்கி இதுவரை 3 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் எனவும் 4 ஆயிரத்து 521 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் 441 பேரை காணவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தவர்களின் உடல்களும் மீட்கப்பட்டு வருகின்றன.

நிலநடுக்கம் ஏற்பட்டு 5 நாட்கள் ஆன நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மீட்புப் பணியின்போது கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கிய இளைஞன் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார். தலைநகர் நேபிடாவில் நேற்று முன்தினம் அதிகாலை 12. 30 மணியளவில் நடைபெற்ற மீட்புப் பணியின் போது 26 வயது இளைஞன் உயிருடன் மீட்கப்பட்டார். நிலநடுக்கத்தின்போது இடிந்து விழுந்த ஹோட்டல் கட்டடத்தின் இடிபாடுகளுக்குள் சிக்கிய இளைஞனை 5 நாட்களுக்குப் பின்னர் மீட்புக்குழுவினர் உயிருடன் மீட்டுள்ளனர். (எ)

# ஜப்பானில் நிலநடுக்கம்

ரோக்கியோ, ஏப். 04

ஜப்பானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அந்த நாட்டின் யுஷூ தீவில் நேற்று முன்தினம் இரவு 07. 34 மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவில் 6.0 ஆக பதிவான நிலநடுக்கத்தால் கட்டடங்கள் அதிர்ந்தன. இதனால், அதிர்ச்சியடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர். அதேவேளை, இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்பு உள்ளிட்ட பாதிப்புகள் எதுவும் ஏற்படவில்லை. மேலும், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை. (எ)

# இந்திய பொருட்கள்மீது 26 சதவீதம் வரி விதிப்பு

## ட்ரம்ப் அதிரடி அறிவிப்பு

வாஷிங்டன், ஏப். 04

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 26 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பரஸ்பர வரி விதிப்பை ட்ரம்ப் அறிவித்துள்ளார். இதன்படி, இந்திய உற்பத்திப் பொருட்கள் மீது 26 சதவீதம் வரி விதிக்கப்படும் என்றும் சீனாவின் இறக்குமதி பொருட்களுக்கு 34 சதவீதம் கூடுதல் வரி விதிக்கப்படும் என்றும் தெரிவித்தார். ட்ரம்பின் இந்த வரி வதிப்பு அறிவிப்பால் சர்வதேச அளவில் வர்த்தக போர் ஏற்படும் அபாயமும் பொருளாதார நிச்சயமற்ற சூழலும் ஏற்படும் அபாயம் உள்ளதாக பொருளாதார வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

இந்தியா, சீனா மட்டுமின்றி பல்வேறு நாடுகளுக்கு எதிராகவும் பரஸ்பர வரியை ட்ரம்ப் விதித்துள்ளார். அதிகபட்சமாக கம்போடியா மீது 49, வியட்நாம் மீது 46 , இலங்கை மீது 44 சதவீதம் பரஸ்பர வரி விதிக்கப்படுவதாக அறிவித்துள்ளார். அதேபோன்று, அமெரிக்காவில் தயாரிக்காமல் இறக்குமதி செய்யப்படும் கார்கள் மீது 25 சதவீதம் வரி விதிக்கப்படும் எனவும் ட்ரம்ப் கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் அசத்தல் வெற்றி!

பெங்களூரு, ஏப். 04

ஆர். சி. பி. அணிக்கு எதிரான போட்டியில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி அசத்தல் வெற்றி பெற்றது.

18ஆவது ஐ. பி. எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று முன்தினம் நடைபெற்ற 14ஆவது லீக் ஆட்டத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியுடன் குஜராத் றைற்றன்ஸ் அணியும் மோதின. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூரு அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 169 ஓட்டங்கள் எடுத்தது.

இதையடுத்து, 170 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி துவக்கம் முதலே அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியது. சாய் சுதர்சன் 49 ஓட்டங்கள் அடித்தார். அதிரடியாக விளையாடி பந்துகளை சிக்ஸர்களுக்கும் பௌண்ட்ரிகளுக்குமாக பறக்க விட்ட பட்லர் கடைசி வரை ஆட்



டமிழக்காமல் நின்று 39 பந்துகளில்73 ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம், குஜராத் அணி 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. நடப்பு ஐ.பி.எல். தொடரில் பெங்களூரு அணி அடைந்த முதல் தோல்வி இதுவாகும். (எ)

# வெற்றிப் பாதைக்கு திரும்ப சென்னைக்கு ஆலோசனை

சென்னை, ஏப். 04

சென்னை அணி வெற்றிப் பாதைக்கு திரும்ப சிறீகாந்த் சில ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இதுவரை 3 போட்டிகளில் விளையாடி ஒரு வெற்றி, 2 தோல்விகளுடன் புள்ளிப்பட்டியலில் 7ஆவது இடத்திலுள்ளது.

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், சென்னை அணி வெற்றிப் பாதைக்கு திரும்ப இந்திய அணியின் முன்னாள் வீரரான சிறீகாந்த் சில ஆலோசனைகளை வழங்கியுள்ளார். இது தொடர்பில் அவர் கூறுகையில், "ஓவர்டன் இடத்தில் டெவான் கொன்வே விளையாட வேண்டும். அத்துடன் அன்சுல் கம்போஜை அணிக்குள் கொண்டு வாருங்கள். அஸ்வினை பொறுத்த வரை அவரை அணியிலிருந்து நீக்காதீர்கள். ஆனால், பவர்பிளே ஓவர்களில் அவர் பந்துவீசுவதை நிறுத்துங்கள்.

7 முதல்18 வரையிலான ஓவர்களில் அவர் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவராக இருப்பார். ஜடேஜா, நூர் அஹ்மத், அஸ்வின் ஆகியோர் எளிதாக 10 ஓவர்களைக் கடத்திவிடுவார்கள்- என்றார். (எ)

# கோவா அணியை வீழ்த்தி பெங்களூரு அணி வெற்றி

பெங்களூரு, ஏப். 04

ஐ. எஸ். எல். உதைபந்தாட்ட தொடரில் கோவா அணியை வீழ்த்தி பெங்களூரு எவ். சி. அணி வெற்றி பெற்றது.

13 அணிகள் இடையிலான 11ஆவது இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) உதைபந்தாட்ட தொடரில் லீக் மற்றும் பிளேஓவ் சுற்றுகள் முடிவில் மோகன் பகான் சுப்பர் ஜெயண்ட்ஸ், எவ்.சி. கோவா, பெங்களூரு எவ்.சி., ஜாம்ஷெட்பூர் எவ்.சி. ஆகிய அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின. ஒவ்வொரு அரையிறுதியும் இரண்டு ஆட்டங்கள் கொண்டதாக நடத்தப்படுகிறது.

இதில் பெங்களூருவில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதியின் முதலாவது சுற்றில் பெங்களூரு அணி, எவ்.சி. கோவா அணியை எதிர் கொண்டது. இந்த ஆட்டத்தில் பெங்களூரு எவ்.சி. அணி 2 - 0 என்ற கோல் கணக்கில் எவ்.சி. கோவாவை வீழ்த்தியது. 42ஆவது நிமிடத்தில் கோவா அணியின் சந்தேஷ் ஜிங்கன் பந்தை தடுக்க முயற்சிக்கையில் தவறுதலாக பந்து அவர் மீது பட்டு கோல் வலைக்குள் சென்று சுய கோலாக மாறியது.

பெங்களூரு அணியின் எட்கர் மெண்டேஸ் 51ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். (எ)



லக்னோ அணி படுதோல்வி

# ஆடுகளம் தொடர்பில் ஜாகீர் கான் அதிருப்தி



லக்னோ, ஏப். 04

லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணி படுதோல்வியடைந்த நிலையில் ஆடுகளம் தொடர்பில் ஜாகீர் கான் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

நடப்பு ஐ.பி.எல். சீசனின் 13ஆவது லீக் ஆட்டம் கடந்த முதலாம் திகதி லக்னோவில் நடைபெற்றது. இதில், 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் கிங்ஸ் அணி வெற்றி பெற்றது. இது லக்னோ அணியின் ஆலோசகரான ஜாகீர் கானை எரிச்சல் அடையச் செய்துள்ளது.

பஞ்சாப் கிங்ஸ் அணியின் ஆடுகள தயாரிப்பாளர் இங்கு வந்து ஆடுகளத்தை அவர்களுக்குச் சாதகமாக அமைத்தது போல் இருந்தது என்று ஜாகீர் கான் சாடியுள்ளார்.

"ஆடுகள தயாரிப்பாளர் என்ன சொல்கிறாரோ, அதன்படிதான் நாங்கள் எங்கள் உத்திகளை வகுப்போம். நான் தோல்விக்கு இதை ஒரு சாக்குப் போக்காகச் சொல்லவில்லை. கடந்த ஆண்டு கூட துடுப்பாட்ட வீரர்கள் இங்கு தடுமாறவே செய்தனர். இவையெல்லாம் கிரிக்கெட்டின் போக்குகள் தான் என்பதை அறிவேன். ஆனால், இது எங்கள் சொந்த மைதானம். ஆகவே அதற்கேற்ப ஆடுகளத்தை கேட்பது, எங்களுக்கான சலுகைகளைப் பெறும் உரிமை உண்டுதான். நிச்சயம் வெற்றிப்பாதைக்குத் திரும்புவோம்-" என்றார். (எ)

# இந்தியா - மே. இ. தீவுகள் இடையே ஒக்ரோபரில் 2 டெஸ்ட் போட்டிகள்

புதுடில்லி, ஏப். 04

மேற்கு இந்திய தீவுகள் அணியுடன் 2 டெஸ்ட் போட்டிகளில் இந்தியா விளையாடவுள்ளது.

நடப்பாண்டில் இந்திய கிரிக்கெட் அணி பங்கேற்கும் போட்டிகள் தொடர்பான விவரங்களை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.) நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதன்படி ஒக்ரோபரில் இந்தியாவுக்கு செல்லும் மேற்கு இந்திய தீவுகள் அணி, இந்தியாவுடன் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் போட்டி அகமதாபாத்தில் 2ஆம் திகதியும், 2ஆவது போட்டி கொல்கத்தாவில் ஒக்ரோபர் 10ஆம் திகதியும் தொடங்கவுள்ளது. இதைத் தொடர்ந்து, தென்னாபிரிக்க அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்யவுள்ளது.

இந்தியா, தென்னாபிரிக்க அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி டில்லியில் நவம்பர் 14ஆம் திகதியும், 2ஆவது போட்டி குவாஹாட்டியில் நவம்பர் 22ஆம் திகதியும் தொடங்கவுள்ளது.

நவம்பர் 30ஆம் திகதி, 3 ஆட்டங்கள் கொண்ட சர்வதேச ஒரு நாள் போட்டித் தொடர் தொடங்குகிறது. ராஞ்சியில் நவம்பர் 30ஆம் திகதி முதல் ஆட்டமும், ராய்ப்பூரில் டிசெம்பர் 3ஆம் திகதி 2ஆவது ஆட்டமும், டிசெம்பர் 6ஆம் திகதி விசாகப்பட்டினத்தில் 3ஆவது ஆட்டமும் நடைபெறவுள்ளது. இதைத் தொடர்ந்து 5 சர்வதேச ரி - 20 ஆட்டங்களில் இரு அணிகளும் பங்கேற்கவுள்ளன.

முதலாவது போட்டி டிசெம்பர் 9ஆம் திகதி கட்டாக்கிலும், 2ஆவது போட்டி 11ஆம் திகதி புதிய சண்டிகரிலும், 3ஆவது போட்டி 14ஆம் திகதி தரம்சாலாவிலும், 4ஆவது போட்டி 17ஆம் திகதி லக்னோவிலும், 5ஆவது ரி - 20 போட்டி டிசெம்பர் 19ஆம் திகதி அகமதாபாத்திலும் நடைபெறவுள்ளது. (எ)

# வெற்றிக் கிண்ணமே இலக்கு ரோஹித் சர்மா சொல்கிறார்

மும்பை, ஏப். 04

மும்பை அணிக்கு கிண்ணத்தை வென்று கொடுப்பதே தனது இலக்கு என்று ரோஹித் சர்மா கூறியுள்ளார்.

இந்த ஐ.பி.எல். சீசனில் மும்பை இந்தியன்ஸ் அணி, இதுவரை 3 போட்டிகளில் விளையாடி ஒரு வெற்றி, 2 தோல்விகளை சந்தித்துள்ளது. இன்று 4ஆம் திகதி மும்பை அணி, லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணியுடன் மோதவுள்ளது.

இந்த நிலையில், மும்பை அணியின் முன்னாள் தலைவர் ரோஹித் சர்மா கூறுகையில், ஐ.பி.எல். போட்டிகளின் தொடக்கத்தில் நான் நடுவரிசையில் களமிறங்கி விளையாடினேன். இப்போது, தொடக்க வீரராக இருக்கிறேன். முதலில் நான் தலைவராக இருந்தேன். இப்போது, அணித் தலைவர் இல்லை. நாங்கள் கிண்ணத்தை வென்ற சீசன்களில் எங்களது அணி வீரர்களாக இருந்தவர்கள் இப்போது பயிற்சியாளராக உள்ளனர்.

எனவே, வீரர்களின் பங்கு பயிற்சியாளர் என மாறி




விட்டது. ஆனால், வீரர்களின் மனநிலை அப்படியே தான் உள்ளது. இந்த அணிக்காக நான் என்ன செய்ய விரும்புகிறேன் என்பது மாறவில்லை. ஆட்டங்களையும் கிண்ணங்களையும் வெல்வதே அது.

அதற்காகவே மும்பை இந்தியன்ஸ் பெயர் பெற்றது. பல ஆண்டுகளாக, நாங்கள் கிண்ணங்களை வென்றுள்ளோம். யாரும் நம்பாத சூழ்நிலைகளில் இருந்து ஆட்டங்களை மாற்றியமைத்து வெற்றி கண்டுள்ளோம்- என்றார். (எ)

# ராஜஸ்தான் தலைவருக்கு ரூ. 41 இலட்சம் அபராதம்!

குவாஹாட்டி, ஏப் 04



மெதுவாக பந்து வீசியதற்காக ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தலைவர் ரியான் பராகுக்கு இலங்கை மதிப்பில் 41 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

18ஆவது ஐ.பி. எல். சீசனின் 11ஆவது லீக் ஆட்டம் இந்தியாவின் குவாஹாட்டியில் நடைபெற்றது. இதில் சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணி கள் மோதின. இதில் ராஜஸ்தான் அணி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் மெதுவாக பந்து வீசியதற்காக ரியான் பராகுக்கு ஐ. பி. எல். நிர்வாகத்தால் 41 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஐ. பி. எல். நடத்தை விதிகளின் பிரிவு 2 .2இன் கீழ் இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிராகரிக்கப்பட்ட...

மனுக்கள் தொடர் பாக இன்று வரை தேர்தலை நடத்துவதற்கான எந்தவொரு மேலதிக நடவடிக்கைகளையும் எடுப்பதைத் தவிர்க்குமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிட் டது. (அ)

## இந்திய...

ஜனாதிபதி செயலகத்தில் கோரிக்கை கடிதம் ஒன்று நேற்று கையளிக்கப்பட்டது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-


இந்தியப் பிரதமர் மோடியுடன் ஆறு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதில் எவ்வாறான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்ற கேள்வி மக்கள் மத்தியில் காணப்படுகிறது. நாட்டுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய வகையிலான ஒப்பந்தங்களா அவை என நாம் கேட்கிறோம். அவை அமைச்சரவைக்குக் கூட அறிவிக்கப்பட வில்லை. பாராளுமன்றத்திலும் தெரிவிக்கப்படவில்லை.

ஆட்சிக்கு வந்ததும் நடந்து வருகிறேன், செலவுகளைக் குறைத்து விட்டேன் எனக் கூறும் ஆட்சியாளர்கள் இவ்வாறான திட்டங்கள் குறித்து மக்களுக்கு அறிவிக்கவேண்டும்.

ஆதலால் அது குறித்த கோரிக்கைக் கடிதம் ஒன்றை ஜனாதிபதி செயலகத்தில் கையளித்துள்ளோம். அத்துடன் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விளக்கமும் கோரியுள்ளேன் - என்றார்.

## இன்று...



வரவேற்பு நிகழ்வு நாளை காலை கொழும்பில் உள்ள சுதந்திர சதுக்கத்தில் நடைபெற உள்ளது .

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட உள்ளதோடு இருதரப்பு பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பிலும் கலந்து கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

இதன்போது எரிசக்தி, டிஜிற்றல் மயமாக்கல், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் இந்தியாவுடனான கடன் மறுசீரமைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் ஆகியவை பரிமாறிக் கொள்ளப்பட உள்ளன.

இந்திய ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையத் திட்டம் ஆரம்பிப்பு, வெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய 5,000 மெற்றிக் தொன் தம்புள்ளை களஞ்சிய வளாகத்தின் நிர்மாணம், 5,000 மதத் தலங்களின் கூரைகளில் சூரிய மின்கலங்களை நிறுவும் திட்டம் என்பன இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஒன்லைன் ஊடாக ஆரம்பித்து வைக்க உள்ளார்.

அதேபோல், இந்தியப் பிரதமர் அனுராதபுரம் ஸ்ரீ மகா போதிக்கு வழிபாடு மேற்கொள்ள இருப்பதுடன் இந்திய அரசாங்கத்தின் அன்பளிப்புடன் நிறுவப்பட்ட மஹவ -அனுராதபுரம் ரயில் சமிக்ஞை கட்டமைப்பு மற்றும் மறுசீரமைக்கப்பட்ட ரயில் பாதையை திறந்து வைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் பிற்பகல் இலங்கைக்கான சுற்றுப்பயணத்தை நிறைவு செய்துகொண்டு இந்தியப் பிரதமர் நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஈழத்...

காட்டி, இலங்கை குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே சிறீதரன் எம்.பி மேற்குறித்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

கடவுச் சீட்டுக்கான புகைப்படங்களை எடுக்கும்போது, தமிழ்ப் பெண்கள் பொட்டிடுவதும், இந்துசமயக் குருமாராக இருந்தால் அவர்கள் விபூதி, சந்தனம் உள்ளிட்ட மத அடையாளங்களைத் தரித்திருப்பதும் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டுமென, அகில இலங்கை அரச உரிமை பெற்ற புகைப்படப்பிடிப்பாளர் சங்கத்தினரால், வடக்கு மாகாண புகைப்படப்பிடிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

அந்தவகையில், மேற்குறித்த அறிவிப்பானது தமிழ் மக்களின் இன, மத அடையாளங்களை வலிந்து பறிக்கும் ஓர் அடிப்படை உரிமை மீறலாக உள்ளதை தங்களின் மேலான அவதானத்துக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். - என்றுள்ளது. (அ-05)

## இராஜதந்திர...

அந்த சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே வஜிர அபேவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2022,2023 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கியமான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டார்.

குறிப்பாக புதுப்பிக்கத்தக்க சக்தி உள்ளிட்ட நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான இராஜதந்திர ஒப்பந்தங்கள் அவை.

அந்த இராஜதந்திர ஒப்பந்தங்களை மீறாத வகையில் புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட வேண்டும்.

அவ்வாறான நிலையிலேயே இந்திய-இலங்கை உறவு மேலும் வலுப்படுத்தப்படும்.

உலகின் சக்திமிக்க நாடுகளில் ஒன்றாக இந்தியா வளர்ந்து வருகிறது. ஆதலால் அவ்வாறானதொரு நாட்டுடன் கடந்த கால ஒப்பந்தங்களை மீறாத வண்ணம் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுமாயின் ஐக்கிய தேசிய கட்சி முழுமையாக ஒத்துழைப் வழங்கும்.

திம்பு பேச்சுவார்த்தையின் பின்னர் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டது. தற்போதைய ஆட்சியாளர்கள். இராஜதந் திர உறவு எந்தளவுக்கு முக்கியமானது என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (அ)

## அமெ...

எம்முடைய நாட்டின் பொருட்கள் மீது அந்த நாடு 44 வீத வரியை விதித்துள்ளது. குறிப்பாக அமெரிக்கா எம்முடைய நாட்டை மாத்திரம் இலக்காக கொண்டு இந்த விடயத்தை மேற்கொள்ளவில்லை. மாறாக ஏனைய நாடுகளுக்கும் இவ்வாறு வரி விதித்துள்ளது.

இத்தகைய பின்னணியில் ஒரு நாடு வேறொரு நாட்டிற்குச் சென்று அவர்களின் கொள்கை முடிவுகளை இயற்றுவதற்கு முன்பு அழுத்தம் கொடுக்க முடியாது. இது அவர்களின் பொதுவான கொள்கை, இப்போது அது நம் மீது ஏற்படுத்தும் எதிர்மறையான தாக்கம் குறித்து கலந்துரையாடி முடிவுகளை எடுக்க வேண்டும்.

என்ன நடந்தது என்பது குறித்து நாங்கள் ஏற்கனவே சில சுற்று உள்ளக பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளோம். இந்த வரிகள் ஏப்ரல் 09 ஆம் திகதியிலிருந்து அமலுக்கு வரும். பேச்சுவார்த்தைகள் மூலம் சாத்தியமான கட்டணக் குறைப்பைப் பெற நாம் எதிர்பார்த்துள்ளோம்.

## சமஷ்டி...

நிரந்தரமாக தீர்ப்பதற்கு இந்திய அரசின் பெறுமதிமிக்க ஒத்துழைப்பை வழங்குமாறு பகிரங்கமாக வேண்டு கோள் விடுக்கிறோம்.

ஒரு நட்பான அயல் நாடு எனும் வகையில் இலங்கையின் நெருக்கடி காலங்களில் இந்தியா எப்போதும் உதவிக்கு வருகிறது.

2022ஆம் ஆண்டு இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா வழங்கிய மாபெரும் பங்களிப்பை நாம் எப்போதும் நன்றியுடன் நினைவிற் கொண்டுள்ளோம்.

அவ்வாறே, 1980 களில் இலங்கையின் தேசியப் பிரச்னையை திர்ப்பதற்கு நடுவராக இந்தியா ஆற்றிய வகிபாகத்தையும் நினைவிற் கொண்டுள்ளோம்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பதின்மூன்றாவது திருத்தச் சட்டமானது குறிப்பீட்ட சில உரிமைகளை இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த தமிழ் பேசும் மக்களுக்கும் ஒட்டுமொத்த இலங்கைக்கும் உறுதிப்படுத்தியுள்ளது.

குறிப்பாக இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு மாகாண ஆட்சி வழங்கப்பட்டது.

அத்துடன் தமிழ் மொழியானது இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் அலுவல்கள் மற்றும் நிர்வாக மொழியாக ஏற்கப்பட்டுள்ளது.

மேலும் மாகாண உயர் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு அவற்றுக்கு மேன்முறையீட்டு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரதான நோக்கமானது, தேசிய பிரச்னைக்கு தீர்வு காண்பதும், இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த தமிழ் பேசும் மக்களுக்கு அதி காரப் பகிர்வு அளிப்பதுமாகும். எனி னும், 13ஆவது திருத்தச் சட்டமானது வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த மக்களுக்கு இறையாண்மை உரிமைகளுடன் கூடிய நிலையான அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்தவில்லை.

இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியானவர் தனது மீயுயர் அதிகாரத்தைப் பயன்படுத்தி மாகாண ஆட்சியை செயலிழக்கச் செய்ய முடியும் என்பது இந்த மாகாண ஆட்சி முறைமையின் இன்னொரு மட்டுப்படுத்தலாகும்.

ஒரு துரதிஷ்டவசமான நிகழ்வாக, இலங்கையின் உச்ச நீதிமன்றமானது 2006 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பாவது "செல்லுபடியற்றதும் சட்டவிரோதமானதும்" எனப் பிரகடனப்படுத்தியது.

இது இந்தப் பிரதேசத்தைச் சார்ந்த தமிழ் பேசும் மக்களுக்கு ஓர் அரசியல் பின்னடைவாகும்.

13 ஆவது திருத்த சட்டம் இலங்கையின் அரசியல் அமைப்பில் உளிவாங்கப்பட்டு 35 வருடங்கள் கடந்துவிட்டவ இந்த இடைப்பட்ட காலத்தில், இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக உள்நாட்டுப் போர் நடைபெற்று 2009ஆம் ஆண்டு முடிவற்றது.

போரின் போதும் போர் முடிவுற உடனடிக் கால கட்டத்திலும் பொது மக்கள் மீது பாரதூரமான மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான மீறல்கள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசுகள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பயிர்வை உறுதிப்படுத்தாததுடன் இராணுவமயமாக்கலையும், சிங்கள் காலணித்துவத்தையும், பௌத்தமயமாக்கலையும் விரிவாக்கினர் அத்துடன் தமிழ் பேசும் மக்களின் மொழியுரிமை மற்றும் கலாசார உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன.

எமது கடந்தகால மற்றும் நிகழ்கால அனுபலங்களின் அடிப்படையில், 13ஆவது திருத்தச் சட்டத்தில் காணப்படும் அதிகாரப் பகிர்வு முறையானது நிலைபேறானதல்ல எந்த நேரத்திலும் இலங்கை அரசானது மாகாண அதிகாரத்தை மீளப்பெற முடியும்.

எனவே, வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த தமிழ் பேசும் மக்கள் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு முறையே எமக்கு கௌரமமான உரிமைகளுடன் கூடிய வாழ்வை உறுதிப்படுத்தக் கூடிய நிலைபேறான ஒரே முறைமை என்று திடமாக நம்புகிறோம்.

அந்தவகையில் தங்களுக்கு நல்வரவு கூறுவதுடன் இலங்கைக்கான தங்களின் உத்தியோகபூர்வ வருகையை நாம் உலர்வாக கௌரவிப்பதுடன், இலங்கையில் இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை ஏற்படுந்த தங்களின் பெறுமதிமிக்க ஒத்துழைப்பை வழங்குமாறு இந்த பகிரங்க வேண்டுகோளை முன்வைக்கிறோம் - என்றனர். (அ)

## புலமைப்...

திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, குறித்த பரீட்சை ஒகஸ்ட் 10 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டு, பரீட்சைகள் ஆணையர் நாயகம் எச்.ஜே.எம்.சி. அமித் ஜயசுந்த இதனைத் தெரிவித்தார்.

குறித்த பரீட்சைக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வரை இணையவழி ஊடாக சமர்ப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

## சட்டக்...

நாமல் ராஜபக்ஷ மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டாரா என்பது குறித்து கவனம் செலுத்துவதாக புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. கூற்றுக்களை சரி பார்க்கும் முயற்சிகளின் ஒரு பகுதியாக புலனாய்வாளர்கள் நிறுவனத்தின் அதிகாரபூர்வ பதிவுகளை ஆய்வு செய்யத் தொடங்கியுள்ளனர் என்றும் புலனாய்வுப் பிரிவு கூறியுள்ளது.

சமர்ப்பிப்புகளைக் கருத்தில் கொண்ட பிறகு, நீதிமன்றத்தில் முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி சிஜடிக்கு உத்தரவிட்டார். (அ)

## கச்சதீவு

வெளியிடுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

தமிழகத்தில் தேர்தல் வருவதாக இருந்தால், அதனோடு சேர்ந்து கச்சதீவு பிரச்னையும் வந்துவிடும். அதேபோல தேர்தல் பிரசாரத்திலும் அது பேசு பொருளாக மாறும். கருணாநிதி, எம்.ஜி. ஆர், ஜெயலலிதா காலங்களிலும் இது பற்றி பேசப்பட்டது. தற்போது முதல்வர் மு.கா. ஸ்டாலினும் அவ் வழியை கையாண்டுள்ளார்.

ஆனால் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்பதை சர்வதேசம் கூட அங்கீகரித்துள்ளது.

எனவே, தமிழகத்தில் தேர்தலுக்கு வேண்டுமானாலும் கச்சதீவு பிரச்னையை வைத்து விளையாடலாம். அது இலங்கைக்குரியது என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.

அதேவேளை, தமிழக மீனவர்களிடமிருந்து பெறப்பட்டு அரசுடமையாக்கப்பட்டுள்ள கப்பல்களை ஆழ்கடலில் மூழ்கடிப்பது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை. அதன் பயன்பாடு தொடர்பில் ஆராயப்பட்டுவருகின்றது.

அத்துடன், பாரதப் பிரதமர் மோடியின் வருகை என்பது மீனவர்களுக்கான வருகை அல்ல.13 ஆவது திருத்தத் துக்கான வருகையும் அல்ல. அவ்வாறு கூறிக்கொண்டு வேண்டுமானால் இங் குள்ள தமிழ்க் கட்சிகள் சுய திருப்தி அடையக் கூடும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அமெரிக்காவின் புதிய வரி:
# பரிந்துரைகளை பெறுவதற்காக குழுவை நியமித்தார் ஜனாதிபதி!

கொழும்பு, ஏப். 04

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள புதிய வரியால் ஏற்படக்கூடிய பிரச்னைகள் குறித்து ஆழமாக ஆராய்ந்து அரசாங்கத்துக்கு பரிந்துரைகளை சமர்ப்பிக்க ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க குழு ஒன்றை நியமித்துள்ளார்.**

இதன்படி, நிதி அமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர், இலங்கை முதலீட்டு சபையின் தலைவர், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர், வெளியுறவு அமைச்சின் பொருளாதார விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம், ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, இலங்கை வர்த்தக சபையின் பிரதான பொருளாதார கொள்கை ஆலோசகர் ஷிரான் பெர்னாண்டோ, அஷ் ரப் ஒமர், ஷெராட் அம லீன் மற்றும் சைப் ஜெபர்ஜி ஆகியோர் இந்த குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தில் புதிய வரிக் கொள்கை நேற்று வியாழக்கிழமை முதல் நடைமுறைக்கு வந்துள்ள சூழலில், இலங் கைக்கு 44 வீத வரிவிதிப்பு இதில் இடம் பெற்றுள்ளது. இலங்கையின் ஆடைகள் ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய நாடாக அமெரிக்கா உள்ளது. இந்த வரிவிதிப்பு நிச்சயம் ஆடை ஏற்றுமதி துறையில் பெரும் தாக்கத்தை செலுத்தும் என பொருளாதார நிபு ணர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## அமெரிக்காவின் வரி விதிப்பால் ஆடைத்துறை வீழ்ச்சியடையும்!

### பேராசிரியர் வசந்த எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 04

அமெரிக்கா விதித்துள்ள புதிய வரி அதிகரிப்பு இலங்கையின் பொருளாதார எதிர்காலத்தில் மிகவும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார துறையின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

தற்போது 12 வீதமாக காணப்படும் வரியானது 40 வீதத்துக்கும் அதிகமாக அதிரிக்கப்பட்டுள்ளது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கைமீது விதிக்கப் பட்டுள்ள வரி மிக அதிகமாகும்.

இந்த நிலைமை இலங்கையின் ஏற்றுமதியில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இலங்கையின் ஏற்றுமதியில் 25 வீதத்துக்கும் அதிகமானவை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, ஆடைகள் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தக் கட்டணக் கொள்கை இலங்கையின் ஏற்றுமதியைக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய வழிகள் உள்ளன. மேலும், ஏற்றுமதி வருவாய் கணிசமாகக் குறையக்கூடும். ஏற்றுமதிகள் இவ்வாறு வீழ்ச்சியடைந்தால், எதிர்கா லத்தில் இலங்கையில் ஆடைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏராளமானோரின் வேலைகள் ஆபத்தில் சிக்க வாய்ப்புள்ளது.

இதேவேளை, எந்தவொரு நாட்டிலிருந்தும் அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு குறைந்தபட்சம் 10 சதவீத வரியை விதிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முடிவு செய்துள்ளார். இலங்கைக்கு 44 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. அதிக வரி விதிகப்படுகளைக் கொண்ட முதல் ஐந்து நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேர்தல் தொடர்பில் 456 முறைப்பாடுகள்

கொழும்பு, ஏப். 04

எதிர்வரும் மே 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் நேற்று முன்தினம்வரை 456 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 04 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 423 முறைப்பாடுகளும் ஏனைய விடங்கள் தொடர்பில் 29 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித் துள்ளது. (ஐ)

## ஜே.வி.பியை உருவாக்கியவரின் புதல்வரும் தேர்தலில் போட்டி!

கொழும்பு ஏப். 04

இரண்டாம் தலைமுறை அமைப்பு சார்பில் எதிர்வரும் மே 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தலில் நாம் போட்டியிடுகிறோம் என படுகொலை செய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே. வி. பி.) தலைவர் ரோஹண விஜயவீரவின் மகன் உவிந்து விஜேவீர தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடுவதற் காக எமது கட்சி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பெரும்பாலான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து நாம் நியாயத்தை எதிர்பார்க்கின்றோம். இதற்காக எதிர்வரும் காலங்களில் எம்மால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் நாம் எடுப்போம். ஏனென்றால் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் மிகவும் முக்கியம் என நாம் நம்புகின்றோம்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் நாம் பெரும் மாற்றங்களை கண்டோம். இலங்கை வரலாற்றில் முதன்முறையாக இரண்டு பிரதான கட்சிகளை தோற்கடித்து தேசிய மக்கள் சக்தி ஆட்சியை கைப்பற்றியது.

கடந்த கால அரசியலில் இடம்பெற்ற போலி வாக்குறுதிகள் மற்றும் திருப்தியற்ற செயல்பாடுகள் குறித்து மக்கள் அவதானமாக நன்கு சிந்தித்து புதிய மாற்றத்தை கொண்டுவந்துள்ளனர்.

தற்போது அரசாங்கத்தின்மீது மக்கள் விரக்திய டைந்துள்ளனர். இந்த பின்னணியில் இரண்டாம் தலைமுறை அமைப்பு சார்பில் இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாம் போட்டியிடுகின்றோம் - என்றார். (ஐ)

## துப்பாக்கிகளை மீள வழங்காத 42 பேர் தொடர்பில் விசாரணை

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 04

பாதுகாப்பு அமைச்சால் வழங்கப்பட்ட துப்பாக்கிகளை மீள ஒப்படைக்காத 42 பேர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

துப்பாக்கிகளை மீள ஒப்படைக்காத நபர்கள் தற்போது உயிருடன் இருக்கிறார்களா அல்லது அவர்கள் நாட்டில் வசிக்கிறார்களாஎன்பது குறித்து விசாரணை நடத்தி வருவதாகவும் துப்பாக்கிகளை ஒப்படைக்காத வர்கள்மீது விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## மேர்வின் சில்வாவுக்கு தொடர்ந்தும் மறியல்!

கொழும்பு, ஏப். 04

பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட மூவரை எதிர்வரும் 09ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட மூவரும் இன்று வியாழக்கிழமை நீதிமன்றில் முற்படுத் தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்கு போலி ஆவணங்களை தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள அவரின் வீட்டில் வைத்து கடந்த மார்ச் 05ஆம் திகதி குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்த பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழில் கிராம அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பு தொடர்பில் பயிற்சி பட்டறை

யாழ்ப்பாணம், ஏப். 04

கிராம அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பு தொடர்பான பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சிப் பட்டறையின் ஆரம்ப நிகழ்வில் தலைமையுரையாற்றிய பதில் அரசாங்க அதிபர், கிராம அபிவிருத்தித் திட்டங்களில் வறுமை என்ற விடயத்தில் வருமானத்தை மட்டுமே நாம் நோக்குவதாகவும் தற்போது கல்வி, சுகாதாரம் வாழ்க்கைத் தரம் போன்ற பல்பரிமாணங்கள் வறுமை தொடர்பான விடயங்களில் உள்ளடக்கப்படுவதாகவும், பாடசாலையில் மாணவர்கள் வரவு மற்றும் இடைவிலகல்கள் போன்ற விடயங்களும் உள்ளடக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்டு வறுமைக் கிராமங்கள் தெரிவு செய்யப்படுவதாகவும் கூறினார்.

மேலும், கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை தயாரிக்கும் போது வினைத்திறனுடனும் விவேகத்துடன் தயாரிக்க வேண்டியுள்ளதாகவும், எதிர்கால அபிவிருத்தித் தேவை கருதி தயாரிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். (எ)

## மோசடி செய்தாரா நாமல்? விசாரிக்க நீதிமன்று உத்தரவு

கொழும்பு, ஏப். 04

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது சட்டத்தரணி அந்தஸ்தை மோசடியாக பெற்றாரா என்பதை விசாரணைகளை நடத்தி, நீதிமன்றத்துக்கு உண்மைகளை அறிக்கையிடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவானது, கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலியால் சி. ஐ. டிக்கு நேற்று பிறப்பிக்கப் பட்டது.

நாமல் ராஜபக்ஷ சட்டப்பூர்வ அந்தஸ்தை பெற்றது தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் சிறப்பு புலனாய்வு பிரிவினரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உண்மைகளை கருத்தில் கொண்டு தலைமை நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இலஞ்சம் அல்லது ஊழலை எதிர்த்துப் போராடும் குடிமக்கள் சக்தியால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து விசாரணை தொடங்கப்பட்டதாக நீதிமன்றத்தில் விசாரணை அறிக்கையை சமர்ப்பித்த சி. ஐ. டி. தெரிவித்துள்ளது. (ஐ)

## சிறுவன்மீது பாலியல் குற்றம் குற்றவாளிக்கு 7 வருட கடூழியம்

திருகோணமலை, ஏப். 04

8 வயது சிறுவனை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தியவருக்கு 7 ஆண்டுகள் கடூழிய சிறை தண்டனை விதித்தது திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி என். எம். எம். அப்துல்லாஹ் தீர்ப்பளித்தார்.

நேற்று முன்தினம் இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டவர் கிண்ணியா கட்டையாறை சேர்ந்த 38 வயது நபராவார்.

கடந்த 2015 மே 30ஆம் திகதி மதரசாவுக்கு சென்று கொண்டிருந்த சிறுவனை பலவந்தமாக இழுத்துச் சென்று அவரை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார் என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக் கப்பட்டது.

இது தொடர்பான வழக்கு கடந்த 10 வருடங்களாக நடைபெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் அவருக்கு 7 வருட கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

அத்துடன், ஆயிரத்து 500 ரூபாய் தண்டப்பணமும் விதிக்கப்பட்டது. அத்துடன், சிறுவனுக்கு 10 ஆயிரம் ரூபாய் நட்ட ஈடு வழங்குமாறும் அதனை செலுத்தத் தவறினால் ஆறு மாத கால சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org